# கன்மோகினி

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்.




8L
m 211 N22Jm
N44·21·3
183087


OHINI", SINGAPERUMALKOIL

மார்ச் '44.

4 ANNAS

ILLUSTRATED TAMIL MONTHLY

நீங்கள் தொழ வேண்டுமானுல்.

# என்னை

# தொழுங்கள்!



"....நான்தான் கடவுளுக்குப் பிறந்த குட்டிக் கடவுள். நீ ஒரு கீழ்த்தர பிராணி. உன்னுடைய வேலை நான் சொல்லுகிறபடி பதில் பேசாமல் எனக்குப் பணி செய்து நடப்பதே...."

### தவறிவிடாதீர்கள்!

ஜப்பானியர் சாதாரண எதிரிகள் அல்ல. அவர்கள் நேர்மையற்றவர்கள். கொடுமைக்காரத் துரோகிகள். மிருகத்தனமுள்ளவர்கள். பேராசை கொண்டவர்கள். சர்வதேச ஒப்பந்தங்களை மதிக்காதவர்கள். யுத்தக் கைதிகளை துன்புறுத்துபவர்கள். ஜெர்மனியர்கூட அப்படிச் செய்வதில்லை. அவர்களை ஒழிக்க ஒரே வழிதானுண்டு. தரை மேலும், கடல் மீதும், ஆகாயத்திலும் அவர்களை நொறுக்க வேண்டும். அவர்களுடைய சைனியங்களை அடியோடு முறியடிக்க வேண்டும். அவர்கள் பலத்தை அறவே அகற்றி கையாலாகாதவர்களாக்க வேண்டும். அவர்களை நிபந்தனையின்றி சரணாகதியடையச் செய்யவேண்டும். வேறு எதுவும் இக்காட்டுமிராண்டிகளுடைய தொந்தரவிலிருந்து இந்தியாவை நிரந்தரமாகத் தடுக்க முடியாது.

இப்படித்தான் ஜப்பானியன் பேசுகிருன். பேசுவது மட்டுமல்ல; அதைப் பூராவும் மெய்யென்று நம்புகிருன். அதன் கருத்தைக் கவனியுங்கள். அவன் மனதில் ஒரு சாதாரண ஜப்பானிய சிப்பாய் மிகச் சிறந்த இந்தியர்களைவிட தெய்வீக உரிமையினுல் உயர்ந்தவன் எனக் கருதுகிருன். தாகூர், இக்பால், சி. வி. ராமன் போன்றவர்களைவிட உயர்ந்தவன். ஜப்பானிய போர் வீரன், வியாபாரி, தையற்காரன், சக்கிலியன், குடியானவன்கூட தன்னை ஓர் உயர் பிறவியாகவே மதிக்கிருன்.

அப்பேர்ப்பட்ட ஓர் சமூகத்துடன் எப்படி பழகுவது? பார்க்கப்போனுல் அவர்கள் பெருமைப்பற்றவர்கள், தலைகால் தெரியாதவர்கள். அவர்களுடைய பைத்தியக்காரத்தனத்தைக் கண்டு பச்சாத்தாபப்படும்படி தோன்றினுல்கூட அவர்கள் உண்மையில் வெறி பிடித்தவர்கள் என்பதை மறக்க வேண்டாம்! அவர்கள் ஆபத்தானவர்கள்!

!AAA, 569 TM.




18389
சென்னை-600 008

ஸ்ரீராமஜயம்.

சுபானு௵ மாசி௴

மார்ச் 1944

மலர் 21 இதழ் 3

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

JAGANMOHINI

Vol. 21. No. 3. March. 1944.

ஸ்ரீமான். பி. ஸ்ரீ. கணவனைத் திருத்திய மனைவி. 2.

# மங்கையர்க்கரசியார்

கணவனைத் திருத்தி ஸ்ரீ வைஷ்ணவம் என்ற பக்தி வெள்ளத்தால் நாட்டை வளமுறச்செய்தவர் குமுதவல்லியார் என்றால்; சைவம் என்ற பக்திப் பெருக்கால் கணவனைத் திருத்தி நாட்டைப் புனிதமாக்கியவர் மங்கையர்க்கரசியார் என்று சொல்லவேண்டும்.

### குமுதவல்லியும் மங்கையர்க்கரசியும்

சுமார் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்குமுன்—அதாவது, ஏறக் குறையக் குமுதவல்லியார் காலத்திலேயே—வாழ்ந்தவர் மங்கையர்க்கரசியார். இவரும் குமுதவல்லியைப்போல் சோழவளநாட்டைச் சேர்ந்தவர் தான். பெயரால் மட்டுமல்ல; செயலாலும், குணாதிசயத்தாலும் மங்கையர்க்கு அரசியாக விளங்கினார். தமிழ் மங்கையர்கள் இந்நாளிலும் தங்கள் நல்வாழ்வுக்கு ஒரு வழிகாட்டியாகக் கொள்ளலாம் மங்கையர்க்கரசியார் சரித்திரத்தை.

அக்காலத்திலே ஜைனசமயம் க்ஷீணக்கியுற்ற நிலையில் இந்தியா எங்கும் பரவியிருந்தது; பாண்டிய நாட்டிலே சிவபக்தி குன்றிப்போய் ஜைனக் கொள்கைகள் வளர்ந்தோங்கி வந்தன. பாண்டிய மன்னனும் சைவத்தைத் துறந்து ஜைனக் கொள்கைகளையே அனுஷ்டித்து வந்தான். அந்த மன்னனைச் சோழமன்னனுடைய புதல்வியாகிய மங்கையர்க்கரசியார் மணந்துகொண்டிருந்தார்.

ஜைனர்கள் அந்நாளிலே சைவ வைஷ்ணவங்களாகிய பக்திக்கொள் கைகளைக் கண்டித்து வந்தார்கள். ஓலைப்பாயும் மயில்-பீலியும் கையில்ஏந்தி ஜைனத்துறவிகள் நாடெங்கும் சஞ்சரித்துத் தங்கள் மடங்களையும் ஆலயங் களையும் ஏற்படுத்தி வந்தார்கள். பக்திக்கு விரோதமான நாஸ்திகக் கொள்கைகள் ஜனங்களுக்கிடையே பரவத் தொடங்கின. மந்திர தந்திரங் களும், உடம்பை வாட்டிச் செய்யும் நோன்புகளும், தவங்களும், வாழ்வை வெறுக்கும் துறவுக் கொள்கைகளும் நாளடைவில் சமுதாயத்திற்கே கேடு சூழ்ந்துவந்தன.

ஜைன பௌத்தக் கொள்கைகளின் ஸாரத்தை மட்டும் கிரகித்துக் கொண்டு கேடு செய்த அம்சங்களைக் கண்டிக்கமுயன்றார்கள் சிவநேசச் செல்வர்களான நாயன்மார்களும் மஹாவிஷ்ணுவின் மெய்யடியார்களான ஆழ்வார்களும். இவர்களில் அந்நாளிலே தலைசிறந்து விளங்கியவர்கள்

திருமங்கையாழ்வாரும் திருஞானசம்பந்தருமே என்றுகருதலாம். திருமங்கையாழ்வாரின் மனைவிதான் குமுதவல்லியார்; திருஞான சம்பந்தரின் சிஷ்யை மங்கையர்க்கரசியார்.

## மங்கையர்க்கரசியும் திருஞானசம்பந்தரும்

பாண்டிய நாட்டில் ராணியான மங்கையர்க்கரசியாரும் மந்திரியான குலச்சிறையாரும் சிவபக்தர்களாய், திருஞானசம்பந்தரின் உதவியால் மறுபடியும் சைவத்தைத் தங்கள் நாட்டிலே நிலைநிறுத்த முயன்றார்கள். இந்த நோக்கத்தோடு இவர்கள் சம்பந்தர் தங்கியிருந்த இடத்திற்குப் பரிஜனங்களை அனுப்பிவைத்தார்கள்.

சம்பந்தர் அச்சமயம் சோழநாட்டிலே திருமறைக்காடு என்ற வேதாரணியத்தில் எழுந்தருளியிருந்தார். இவர்களுடைய செய்தி கிடைத்ததும் அவர் தமது முத்துப் பல்லக்கில் ஏறிக்கொண்டு பாண்டிய நாட்டிற்குப் புறப்பட்டார். மந்திரியான குலச்சிறையார் மதுரைக்கு வெளியே போய் ஞானசம்பந்தரை எதிர்கொண்டு அழைத்து வந்தார்.

மதுரையைச் சமீபித்ததும், மங்கையர்க்கரசியாரின் சிவபக்தியையும் குலச்சிறையாரின் சிவபக்தியையும் சிறப்பித்துத் திருஞானசம்பந்தர் ஒரு பதிகம் பாடினார். ஒரு பக்கத்திலே ஒதுங்கிநின்ற மங்கையர்க்கரசியார் முன்னே வந்து திருஞானசம்பந்தரின் அடிகளில் விழுந்து வணங்கினார். பிறகு சம்பந்தர் தமது பரிஜனங்களாகிய அடியார்களோடு மதுரைமாநகரில் ஒருமடத்திலே எழுந்தருளியிருந்தார். அப்போது சமணர்கள் அந்த மடத்திலே நெருப்பை வைத்தார்களாம்.

அதை அறிந்துகொண்ட சம்பந்தர், "இந்த வெப்பம் பையவே போய்ப் பாண்டியனை அடையவேணும்" என்று கட்டளையிட்டாராம். மடத்திற்கு யாதொரு தீங்கும் நேரவில்லை. அந்த வெப்பம் அரசனுக்கு வெப்பு நோயாகவந்துவிட்டது! எவ்வளவோ வைத்தியம் செய்து பார்த்தார்கள். சமண குருமார்களும் தங்கள் மந்திர தந்திரங்களையெல்லாம் பிரயோகித்துப் பார்த்தார்கள். நோயோ அதிகரித்துவந்தது.

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் திருஞானசம்பந்தரை அழைத்துவந்தார்கள். அவர் "மந்திரமாவது நீறு" என்று பாடித் திருநீறு பூசி அரசனுடைய நோயைக்குணமாக்கிவிட்டார். அப்பால் திருஞானசம்பந்தருக்கும் சமண குருமார்களுக்கும் புனல்வாதம், கனல் வாதம் என்ற வாதங்கள் ஏற்பட்டதாகவும் அந்த வாதங்களில் சமணர்கள் தோற்றுக் கழுவேறி மாண்டதாகவும் பெரியபுராணம் தெரிவிக்கிறது.

## குணாதிசயம்

ஒரு பெண்மணியாகிய மங்கையர்க்கரசியாரால் சைவம் மறுபடியும் பாண்டியநாட்டில் தழைத் தோங்கியதென்றால், அந்தப் பெண்மணியின் பக்தியும் சக்தியும் கொஞ்சமோ? இத்தகைய பெண்மணி அல்லவா உண்மையான வாழ்க்கைத் துணைவி? பாண்டிய நாட்டு ராணியாகிய மங்கையர்க்கரசியைப் பாண்டிமாதேவியென்றும் சொல்வதுண்டு.

இந்தச் சிவநேசச் செல்வியைத் தமிழ் நாட்டின் தவச் செல்வியருள் ஒருத்தியென்னும் சொல்லலாம். கணவனை பாண்டியன் சைவம் என்ற பக்திநெறியைவிட்டு ஜைனமதத்தைத் தழுவிக்கொண்ட காலத்திலும் இந்த அம்மையார் மதம் மாறவில்லை என்பதே இவருடைய வீரசுதந்திர உணர்ச்சிக்கும் ஒரு சாட்சியாகிறது. கணவன் மதம் மாறியது குறித்து இவர் அவனை இகழவும் இல்லை. மன உறுதியோடு கணவனைத் திருத்திச் சிவனருளுக்குக் கொண்டுவந்தாரென்றால், இந்த மனத்திண்மையைத்தான் என்னென்பது? கல்லைப்போல் திண்மை வாய்ந்த இம்மனநிலையே இவரது கற்பு என்று சொல்லவேண்டும்.



மங்கையர்க்கரசியார் என்ற பெயரே எவ்வளவு பதிபக்திக்கும் சிவ பக்திக்கும் ஒருங்கே அறிகுறியாயிருக்கிறது! எவ்வளவு அறிவிற்கும் அன்பிற்கும் வீரத்திற்கும் ஒரு நிலைக்களமாய் இருக்கிறது! "நாட்டிலே தவறு நடக்கிறது; அதர்மம் கொலுவீற்றிருக்கிறது! நான் பார்த்துக் கொண்டிருப்பதா? சிவதர்மத்தை நிலைநாட்டுவதில் முன்வைத்த காலைப் பின்வைக்கமாட்டேன்!" என்று எழுந்த இந்த மங்கையின் தேசபக்தியைத் தான் என்னென்பது?

ஆம்; இந்தத் தமிழ்மங்கை இந்நாளிலும், தேசபக்தித்துறையிலும் கூட நம் தமிழ்ப்பெண்களுக்கு ஒருவழிகாட்டியாக விளங்குகிறார்.

---

**சந்தாநேயர்கள் அவசியம் கவனிக்கவும்**

**என்கிற தலைப்பின்கீழுள்ளதைக் கூர்ந்து படிக்கவும்**

---



# அழகின் மலர்ச்சி

மொட்டுக் குள்ளே யழகு—சும்மா
மூடிக் கிடக்குதம்மா...கதிர்
பட்டு மலர்ந்துவிட்டால்— அது
பரி மளிக்கு தம்மா!

சிந்தனைக் குள் அழகு—நாளும்
தேங்கிக் கிடக்கு தம்மா—மனப்
பந்தனை யற்றுவிட்டால்—அது
பரந்து தாவுதம்மா!

நெஞ்சுக்குள்ளேயழகு—மிக
நிரம்பித் தோயுதம்மா—அது
கொஞ்சம் திறந்துவிட்டால்—அன்பு
கொட்டிக் குமுறுதம்மா!

பாரினி லேயழகு—கண்
பார்வையைக் கொஞ்சுதம்மா—அதன்
போர்வையை நீக்கிவிட்டால்—தெய்வப்
பொலிவு காணுதம்மா!

மோனத்தி லேயழகு— சக்தி
மூண்டு ததும்பு தம்மா—ஆத்ம
ஞானம் பிறந்துவிட்டால்—அது
நான் எனத் துள்ளுதம்மா!

சுத்தானந்த பாரதி

ஸ்ரீ. சுவாமி சுத்தானந்த பாரதியார்

# கேப்பைக்களி தெம்மாங்கு

நமது நாடும் உலகும் இருக்கும் நிலையும், போகிற போக்கும் பார்த்தால், இரத்தக்கண்ணீர் வருகிறது. பொன்னும் பசுமையும் குலுங்கும் இந்நாட்டில் எலும்பெடுத்து, வயிறெக்கித் திரியும் பஞ்சைகளை எங்கும் காண்கிறோம். நம்மவர் சராசரி வரும்படி இரண்டணா. சராசரி ஆயுள் 23 வயது. நமது கையும் வாயும் கட்டுண்டு கட்டாயச் சிறையிற் கிடக்கின்றோம்...சுற்றிலும் மடமைக்காரிருள் சூழ்ந்திருக்கிறது...நமது பழஞ்செல்வங்களெல்லாம் கப்பலேறி அன்னியக்காட்சிசாலையில், பள்ளிக்கொண்டு, விநோதப் பொருள்களாக விளங்குகின்றன. நவநாகரீகத்தின் தீமைகளெல்லாம் நம்மை விஷப்பூச்சிகள்போல் அரித்துக்கொண்டிருக்கின்றன. இந்த நிலையைக்கண்டு உருகி உருகி உள்ளமழிந்த எங்கள் வாழ்விற்குப் பொங்கல், தீபாவளி, நாள், கிழமை எவையும் வேண்டியிருக்கவில்லை. நல்ல தங்கை நாடகத்தில் விதூஷகன் புகுந்ததுபோல், ஏதோ மாமூலாக இச்சடங்குகள் நடக்குயேயொழிய மனம் கோடிக்கணக்கான ஏழைகளின் கதியை எண்ணிக் கண்ணீர்விடும்...நான் இந்த நாட்களில் பட்டினியிருந்து, நாடு விடுதலைபெற இறைவனை வணங்கிக் கவிமாலை சூட்டுவதே வழக்கம். ஸ்ரீ வ. வெ. சு ஐயர் இத்தகைய நாட்களில், பிறர் மனம்நோகாமல் கோடிவேட்டி உடுத்தச்சொல்லுவார். அவர் தேசத்தின் சோகச்சித்திரத்தையே மனக்கண்ணால் கண்டு கம்பீரமான விசனக்குறியுடன் பேசுவார்.

தமிழ்க்குருகுலத்தில் தீபாவளி நடந்தது. மாணவர்களுக்கு ஐயர் கதர்வேஷ்டி கொடுத்துவிட்டு என்னை அழைத்துக்கொண்டு மேலே சென்றார். இருவரும் மாடியில் அமர்ந்து, "கம்பன்" சுந்தர காண்டத்தில், நிந்தனைப்படலம் படித்துக்கொண்டே, இடையிடையே சீதாதேவி போலவே பாரதமாதா சத்தியாக்கிரகம் இருந்து அசுர சக்திகளுடன் சாந்தப்போர் புரியும் காட்சியை வர்ணித்துக்கொண்டிருந்தோம். ஐயர் இடையிடையே ஹோமரின் இலியாதிலிருந்து உருக்கமான வரிகளை எடுத்துச் சொன்னார். அச்சமயம் கீழே மாணவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர்.......நாங்கள், கடுமையாக உழைத்துப் புசித்து, சுறுசுறுப்பான ஸஹனசக்தியை வளர்க்க, ஆசிரமத்தில் கேப்பைஇட்டலி, கேப்பைக்களி முதலிய புஷ்டியான உணவை அளித்துவந்தோம்...இது சில செல்லக்குழந்தைகளுக்குப் பிடிக்கவில்லை. 'தீபாவளியன்றும் கேப்பையா' என்று சிலர் சினந்தனர். ஒரு பையன் அதற்கொரு தெம்மாங்கு கட்டிவிட்டான்... அதை ஐந்தாறு பிள்ளைகள் சேர்ந்து, இலைபோட்டுக்கேப்பை உணவு பரிமாறியதும் பாடத்தொடங்கினார்கள்:—

அன்னுமின்னும் கேப்பைக்களி
அடமழைக்கும் கேப்பைக்களி...
தீராதகேப்பைக்களி
தீவாளிக்கும் கேப்பைக்களி...

இதைக்கேட்டதும் ஐயர் "உஹூம் யாரது?" என்று கீழே வந்தார். பையன்கள் ஒருநிமிஷம் சும்மாயிருந்து பிறகுமெல்ல "தீராத கேப்பைக்களி தீபாவளிக்கும்..." என்று முணுமுணுத்தனர். "கேப்பைக் களி உடம்புக்கு நல்ல பலமளிக்கும். ஆனால் இந்தத்தத்தாறிப்பாட்டு மனத்தைக்கெடுத்துக் கவிச்சுவையைப் பாழாக்கிவிடும்...நமது தேசத்தில் ஒருவேளை உண்ணக்கூட வகையில்லாத ஏழைகள் கோடிக்கணக்காயிருக்கிறார்கள். கேப்பைசாப்பிட்டே நாளெல்லாம் உழைக்கும் பாட்டாளிகள் ஏராளமாயிருக்கிறார்கள். கேப்பையில் என்ன தாழ்வு வந்தது?. அரிசியைவிட அதில் சத்ததிகம்... இந்த வயதில் கேப்பையை ஜீரணிக்க முடியாதவர்கள் என்ன செய்யப்போகிறீர்கள்." என்று கண்டித்துவிட்டு, என்னுடன் மேலே சென்றார் ஐயர்......கேப்பைக்களித் தெம்மாங்கு கவிக்கலை விமர்சனத்தைத் தூண்டியது...கவிகளில் பலபடிகள்உண்டு. முதலில் மொழிபெயர்ப்புக்கவிகள். ஒரு பாஷையின் வளர்ச்சிக்கு இவை வேண்டும். ஆனால் மொழிபெயர்ப்பு எவ்வளவு திறமையுடன் செய்தாலும் மூலக்கவிக்கு இணையாகாது...உதாரணமாக போப்பின் "இலியாது" மொழிபெயர்ப்பு, ஹோமரின் நயத்தைக் காட்டவேயில்லை. திராப்பொரியா அதை நாம் படிக்கவேண்டியிருக்கிறது. 'இலியாது'கதை அதனால் விளங்குகிறது.கரே மொழிபெயர்த்த தாந்தேயின் டிவைன் காமெடி கவிச்சுவை ததும்புகிறது. எட்வின் ஆர்நால்டு சமஸ்கிருதம், பாலி பாஷைகளிலிருந்து செய்தவை சுமாராக மூலக் கருத்தை அழகுறக்காட்டுகின்றன. பிரெஞ்சில் ஷேக்ஸ்பியர் மொழிபெயர்ப்புகள் உள்ளன. ஆனால்ஷேக்ஸ்பியருக்கும் அவற்றிற்கும் வெகுதூரம்: வெறும் மொழிபெயர்ப்பால் ஒருவரைப் பெருங் கவியென மதிக்கமுடியாது. கம்பன் வால்மீகியிடமிருந்து கதையை மட்டுமே வாங்கிக்கொண்டான். கவிதை கலை, நவரஸச்சுவை, கதைப்போக்கு, வர்ணனைகள் எல்லாம் கம்பனுடைய தனிப்புலமையிலிருந்து எழுந்தவையே. கம்பனைப்படித்தால் மொழிபெயர்ப்பாகவே தோன்றாது. பக்தியுடன் வீரமும் கலைச்சுவையும் அழகின் காட்சியும் உண்டாகும். அதனாலேதான் கம்பனை நாம் கலைமகுடஞ்சூட்டி வணங்குகிறோம். கீதைக்கு எத்தனையோ மொழிபெயர்ப்புகள் உண்டு; ஆனால் மூலச்சுலோகங்களைப் படிக்கும் இனிமை மொழி பெயர்ப்புகளுக்கு வராது...ஆதலால் மொழிபெயர்ப்புக் கவிகளை ஒருபுறம் வைத்துவிடுவோம்.

அடுத்தது. யாப்பணியிலக்கணங்களையும் தொல்காப்பியச் சூத்திரங்களையும் வைத்தளந்து, செங்கலடுக்குவதுபோலச் சொற்களை அடுக்கிக்கட்டும் செய்யுட்கள்...இவை சொற்சாதுர்யத்துடன் அமைந்திருக்கலாம். தடபுடகடகுடவென்று எதுகைமோனைகளால் காதைக்குடையலாம். பலதுறைப் பழம்பொருட்களை முழுத்தேங்காய் நடையில் புதைத்துவைக்கலாம். நாருரித்து, ஓட்டை உடைத்து, கத்தியால் நறுக்கிச்சப்பிடுவதற்குள் நமது பொறுமை தகர்ந்துவிடும்... இத்தகைய கடுநடைப் பழங்கவிகள் இக்காலத்திற்குப்பயனில்லை. பழைய பண்டிதர்களுக்கே அவற்றை விட்டுவிடுவோம். மேலும்

இவற்றால் கலைக்கோ சமுதாயத்திற்கோ அதிகமான லாபமில்லை... எளிய உரைநடையில் இவற்றை எழுதிப்படித்தாலே போதும்.

இன்னொருவகைக்கவிகள் இலக்கணத்தைத் தழுவாவிட்டாலும் உயர்ந்த நீதியைப்புகட்டும். ஆழ்ந்த கருத்தமைந்திருக்கும்...இவை நமக்குவேண்டும்...மற்றொரு வகைக்கவிகள், நல்ல கட்டிடத்துடன் உயர்ந்த நீதிகளையும புகட்டும். குறள் இத்தகையது. இக்கவிகளில் மனிதவாழ்விற்குச் சிறந்த ஆதர்சனங்கள் கிடைக்கும், இவற்றைக் கலைச்சுவைக்கு மட்டுமன்று; வாழ்விற்கு வழிகாட்டவே அவசிய மாகக் கற்றுக் காக்கவேண்டும். பைபிள், குரான், புத்ததர்மம், கீதை, குறள் இவை மனிதருக்கு வேதமாகும். மற்றொருவகைக் கவிதை வாழ்விற்கு உயர்ந்த பயிற்சியைத்தராமல், கேவலம் கலைச்சுவை மட்டும் அளிக்கும் இனிய சொற்கோவையாயிருக்கும். அவை சிறந்த வர்ணனைகளாயிருக்கலாம். ஷேல்லி, பைரன், கீட்ஸ் முதலிய வை காதல்,கருணை, சோகம் ஆகிய ரசங்கள் பொதிந்து, கம்பீரமான நடையில் எழுதப்பெற்ற கலைச்சுவைக்கவிகளே.

இனி கீழ்த்தரமான நகைச்சுவை, கோமாளிக்கூத்து, காம வர்ணனைகள், அசங்கியமான கொச்சைக்கவிகள், துளிக்கூட உயர்ந்தஉணர்ச்சிகளைத் தூண்டாத தத்தாறிப்பாடல்கள் இவற்றைக் கட்டுடன் ஒழித்துவிடவேண்டும்...இப்பாடல்கள் பெரும்பாலும் நலங்கெட்ட நாடகமேடைகளிலிருந்தும் தெருக்கூத்துக்களிலிருந் தும், ஊர்க்காலிகளின் வாயிலிருந்தும் அட்டகாசஞ்செய்து பரவு கின்றன. இவை நமது காதில் படாமல் பார்த்துக்கொள்வதே நல்லது.

இவற்றிற்கெல்லாம் மேல் அருட்கவிதைகள். இவை அழகிய சொல்லும், ஆழ்ந்த பொருளும், உயர்ந்த உணர்ச்சிக்கனலும், உள்ளத்தை அள்ளும் கலைச்சுவையும், அருட்சுவையும் பொருந்தி யிருக்கும். இத்தகைய கவிகள் உலகில் இருபதுபேருக்கு மேலில்லை. நமது நாட்டில் கம்பன், வால்மீகி, மாணிக்கவாசகர், வியாஸர், சுகர், துளசிதாஸர், சேக்கிழார், நம்மாழ்வார் முதலிய அருட்கவிகள் விளங்குகின்றனர். இவர்களே கவியுலகின் சுடர் மணிகள். இவர்களாலேதான் நாம் கவிக்கலை இன்னதென்றறிய வேண்டும். மற்றநாடுகளில், ஓமர், தாந்தே, விர்ஜில், ஓராஸ், ராஸீன், கெத்தே, மில்தன், ஷேக்ஸ்பியர் ஆகிய மகாகவிகள் சிறந்துவிளங்கு கின்றனர். இவர்கள் வாக்கில் ஆழ்ந்த கருத்தும் கம்பீரமான கலைச் சுவையும் தவழ்கின்றன. ஆனால் அருட்சுவை நமது பாரதநாட்டுக் கவிகள் உள்ளத்திலேதான் பொங்குகிறது...மில்தன், தாந்தே ஆகிய இருவரைத்தான் ஐரோப்பாவின் அருட்கவிகள் என்னலாம்...

---

**உங்களது சந்தா ஆண்டு முடிவுவரைக்கும் இல்லாவிடில், பாக்கியை அனுப்பினால்தான், சஞ்சிகையை தொடர்ச்சியாக அனுப்பமுடியு மென்பதைக் கவனிக்கவும்.**




படத்தைப்பார்த்தால் ஹாஸ்யமாக வரைந்திருக்கிறது என்ற எண்ணத்துடன் சிரிக்கிறோம். ஆனால் கல்யாணப்பெண்விஷயத்திலும் பிள்ளை விஷயத்திலும் இதுபோன்ற ஏமாற்றங்கள் நேரில்பார்ப்பது சொல்விமுடியாது. இதேகாரணத்தினால் அனேகவிடங்களில் கல்யாணமாகாது பெண்ணும் பிள்ளையும் இருப்பதைப்பார்க்கப் பரிதாபமாகவிருக்கிறது. அத்தகைய ப்ரக்ருதிகளை எங்ஙனம் இளைக்கவைப்பது! அதுதான் ஒருவருக்கும் வழியே தெரியவில்லை.

ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

# நம் சகோதரிகளுக்கு மட்டும்

இந்துக்களின் சட்டக் கோட்பாடுகளுக்கு ஆதாரங்கள், மனு, யாஜ்ஞவல்கியர், நாரதர் போன்ற மஹரிஷிகள் செய்திருக்கும் ஸ்மிருதிகளும், கௌதமர், போதாயனர், ஆபஸ்தம்பர் போன்றவர்கள் செய்துள்ள ஸூத்திரங்களும், அந்தந்த ஜாதி, தேச, குலாசாரங்களை ஒட்டித் தொன்றுதொட்டு நடைபெற்றுவரும் சிஷ்டாசாரங்களுமே—அதாவது, பழக்க வழக்கங்களுமே. எனினும் நியாயம், நேர்மை, நல்ல மனச்சாட்சி இவைகளின் உதவியையுங்கொண்டே சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

## இரு பெரும் பிரிவுகள்

ஸ்மிருதிகள் எளிதில் எல்லோருக்கும் புரியக்கூடியன அல்ல. ஆகையால் பல வியாக்கியான கர்த்தர்கள் ஏற்பட்டார்கள். ஒவ்வொரு பிரதேசமும் ஒவ்வொரு வியாக்கியானத்தை ஆதாரமாகக் கொண்டிருப்பதால், அதன்படி சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன, அந்த அந்தப் பிரதேசத்திலே.

பொதுவாக, நம் நாட்டில் சட்டதிட்டங்களை இரு பெரும் பிரிவாகச் செய்துள்ளனர்—தாய பாகமுறை, மிதாக்ஷர முறை என்று. வங்காளத்தில் தாய பாக முறையும், மற்றப் பிரதேசங்களில் மிதாக்ஷர முறையும் அனுசரிக்கப்படுகின்றன. மிதிலை, பெனரிஸ், பம்பாய், சென்னை மாகாணம் இவைகளில் அனுசரிக்கப்படும் மிதாக்ஷர முறையில், சில உட்பிரிவுகளும் உண்டு. தமிழ் நாட்டில் கையாளப்படுகிற முறையையே நாம் இங்கு எடுத்துக்கொள்வோம்.

## விவாகம்

வேதம் பிரமசரியத்தை உயர்த்தி வெகுவாய்ச் சிலாகித்துப் பேசுகிறது. எனினும் இந்துதர்மசாஸ்திரம், ஆண் பெண் இருவருக்கும் 'விவாகம்' ஒரு முக்கிய 'சம்ஸ்காரம்'—சடங்கு—என்று விதிக்கிறது. ஆண்கள் விஷயத்திலேயே இப்படி வற்புறுத்தும்போது, பெண்கள் விஷயத்தில் சொல்லவும் வேணுமா!

விவாகத்தை இந்துப் பெண்களின் முக்கிய லட்சியம்—வாழ்க்கைக் குறிக்கோள்—என்றே சொல்லவேண்டும், தற்காலத்திலுங்கூட. 'ஏன்?' என்று கேட்கலாம்.

'நான் ஆயுள்பரியந்தம் கன்னிகையாகவே வாழப்போகிறேன்' என்று வீறுப்புப் பேசுவது சில புதுமைப் பெண்களின் வழக்கமாக இருக்கிறது. எனினும், 30, 35 வயதானவுடன் இவர்களும் விவாகஞ்செய்துகொள்ள விரும்புவதை நாம் கண்கூடாகப் பார்க்கத்தான் செய்கிறோம்.

## விவாகமும் விவேகமும்

'தனிமை' என்ற ஒரு நிலையில் பழகுவது, எல்லோருக்கும் சாத்தியமா? "நூற்றில் ஒருவருக்கே கைகூடுகிற இந்திரியநிக்கிரகம்-பிரமசரியம் எளிதில் நிலைப்பது பலருக்கும் சாத்தியமாகுமா?" என்பதை யோசித்தோமானால், அந்த வீண்பிரமையை விடவேண்டியதுதான் என்று தெளிவோம்.

...ாதியுற்றவர்களையும், பிறவி-நோய்களினால் கஷ்டப் ...டம், ஏதோ ஒரு நல்ல உத்தேசத்தைக்கொண்டு விவாகம் ... பிரமசாரிணிகளாகவே வாழ விரும்புகிற மங்கையர்களையும் ...கள் விருப்பப்படி விடாமல் வற்புறுத்துவது,—வலுக்கட்டாயப்படுத்துவது—நியாயமாகுமா? இதுவும் நாம் யோசிக்கவேண்டிய விஷயம்தான் இந்த நாளிலே. பால்ய விதவைகள் (Virgin-widows) விஷயத்திலும்கூட, வலுக்கட்டாயமாகப் புனர்விவாகத்தை எதிர்த்துக் கண்டிக்கிற சில சாஸ்திர நிபுணர்கள், இந்தக் கன்னிப்பெண்களின் பிரமசரிய விஷயத்தில்மட்டும் பாரபக்ஷமாக ஏன் இருக்கிறார்கள்? வலுக்கட்டாயமாக விவாகத்தை ஏன் இத்தகைய கன்னிகைகள் விஷயத்தில் விதிக்கிறார்கள்? இதுதான் விளங்கவில்லை.

### விவாகமுறை - பிரமம் விவாகம்

சாஸ்திரம் விவாகத்தை எட்டு முறைகளாகப் பிரித்துக் கூறுகிறது. ஆனால் இப்பொழுது நடைமுறையில் இருப்பன மூன்று வகைகளே. அவை பிரம்ம,கந்தர்வம்,அசுரம் என்பவை. இவை மூன்றுக்கும் வைதிகக் கிரியை முறைகள் யாவும் ஒரேமாதிரி. தாய் தந்தையர் கன்னிகையை அலங்கரித்து, சாட்சியாகத் தாரைவார்த்துக் கன்னியாதானம் செய்துகொடுப்பது 'பிரம்ம விவாகம்.'

### கந்தர்வ விவாகம்

பருவமடைந்த பெண்ணும் பிள்ளையும் ஒருவரையொருவர் பார்த்துக் காதலித்து, மனமொத்து, 'நீ என் மனைவி; 'நீர் என் கணவர்' என்று சுயமாக வரித்துக்கொள்வது கந்தர்வ விவாகம்.

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப**

(தொல்காப்பியச் சூத்திரம்)

என்று தொல்காப்பியர் சொல்லுவதுபோல, 'கள்ளங் கவடற்று' வாழ்ந்து வந்த அந்தப் பழமையான காலத்திலே, வைதிகச் சடங்குக்கு ஏதும் அவசியமில்லாமல் இருந்தது. நாகரிகம் முதிர முதிர வைதிகச் சடங்கு முதல் ரிஜிஸ்தர் செய்துகொள்ளும் சடங்கு பரியந்தம், ஒரு கிரியை வேண்டியிருக்கிறது,—மேற்படி விவாகங்களை நிரூபிப்பதின் பொருட்டு.

### அசுர விவாகம்

மூன்றாவது விவாகம், பெண்ணின் தகப்பனாருக்குக் 'கன்னியாசுல்க'மாக—'பெண்விலை'யாக—ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்துப் பெண்ணை மணந்துகொள்வது.

இந்த விவாகம் ஒரு வியாபாரம்போல—ஒரு பண்ட மாற்றம் போல—இருப்பதினால், பெண்ணை விற்றுத் தகப்பன் லாபம் அடைவது போல இருப்பதினால், மனு முதலியோர்களால் வெகுவாக நிந்திக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவும் வழக்கத்திலிருந்தபடியால் சாஸ்திரத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 'அசுர விவாகம்' என்ற பெயரே இதனுடைய இழிவையும் குரூரத்தையும் விளக்குகிறது.

அப்படியிருந்தும், பெண்ணுக்கு விலை கொடுத்துக் கொள்ளும் வழக்கம்தான் பழையகாலத்தில் இருந்ததேயன்றி, தற்காலம்போலப் பிள்ளைக்கு விலை—வரதக்ஷிணை—கொடுத்துக் கொள்ளும் வழக்கம் அந்நாளில் இருந்ததாகத் தெரியவில்லை.

### வரதட்சிணை விபரீதங்கள்

'தானம்' என்ற பெயருக்கேற்றபடி தானம் கொடுக்கும் பொருளுடன் ஏதேனும் சொற்ப தக்ஷிணையும் வைத்துக் கொடுப்பது முறை என்ற பெயரால் வந்த வழக்கம், இவ்வளவு விபரீதமாக, — ஆயிரம், பதி

ஞயிரம் என்று கொடுக்கும் முறையாக—விளைந்து... காலத்துச் சாஸ்திரிமார்—பாவம்—எப்படி எதிர்பார்த்திரு...

பெண்ணுக்கு 'சுல்கம்' வாங்கிக்கொண்டு செய்யு... மனு ஏன் அவ்வளவுதூரம் கண்டிக்கிறார் என்று ஆராய்ந்து பார்ப்ப... பணத்திற்கு ஆசைப்பட்டுக்கொண்டு, பெற்றோர் தம் பெண்ணை ஒரு தகுதியற்றவனுக்குக் கொடுத்துவிடலாமல்லவா? தகப்பன் இல்லாவிட்டால், பெண்ணின் பந்துக்கள் தம் லாபத்தைக்கருதிப் பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக வலுக்கட்டாயமாய் அவளை (தற்காலத்தைப்போல) ஒரு வியாதியஸ்தனுக்கோ, வயோதிகனுக்கோ, அல்லது ஒரு அயோக்கியனுக்கோ கொண்டு கொடுத்துவிடவும் கூடுமல்லவா ?

இதே காரணங்களை வைத்துக்கொண்டு பிள்ளைக்கு 'சுல்கம்' வாங்கும் முறையும் கண்டிக்கப்படவேண்டியது அவசியமல்லவா இந்த நாளிலே?

### திரிசங்கு சொர்க்கம்

திரிசங்கு-சொர்க்கத்தைப்பற்றிப் புராணம்கூறுகிறதேயன்றி அதைக் கண்டவர் யாருமில்லை. ஆனால் நாம் தற்போது இருக்கும் நிலைமை,—நம்முடைய சாஸ்திரம், சட்டதிட்டம் பழக்கவழக்கங்கள், லக்ஷியங்கள் முதலியன சம்பந்தப்பட்டவரையில்—திரிசங்கு சொர்க்கத்தையே நினைப்பூட்டுகிறது. பழமையான மனுதர்ம சாஸ்திரமும், யாஜ்ஞவல்க்ய ஸ்மிருதியும் நமக்கு எவ்வளவு வேண்டியிருக்கிறதோ, அவ்வளவு வேண்டியிருக்கிறது மேல்நாட்டுக்கொள்கையைப் பின்பற்றிப் புதிதுபுதிதாக அமைக்கப்பட்டு வந்துள்ள தற்காலச் சட்டதிட்டமும்.

பழமையில் ஒரு காலும், புதுமையில் ஒரு காலும்கொண்ட இந்த இரண்டும் கெட்ட வாழ்க்கையைத் திரிசங்கு-சொர்க்கம் என்று கூறாமல் வேறு என்னசொல்வது?

பழமையான கொள்கைப்படி, மணம்செய்துகொள்ளமுடியாதவர்கள் நவநாகரிக ரீதிப்படி ரிஜிஸ்தர்விவாகம் செய்துகொண்டு விடுகிறார்கள்,

புதிய சட்டப்படி ரிஜிஸ்தர்விவாகம் செய்துகொள்ள முடியாதவர்கள் (அதாவது, பெண்ணிருக்கப் பெண்கொள்ளமுடியாதவர்கள்) பழைய இந்துமதசாஸ்திரப்படி பலதாரவிவாகம் செய்துகொண்டு விடுகிறார்கள்.

கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தைபோல, மதம்விட்டு மதம்பாயும் வித்தையும் கற்றுக்கொண்டிருக்கிறார்கள் சில பேர்வழிகள் விவாகவிஷயமாக.

இந்த அவகேடான நிலைமையை மாற்றுவது அவசியம். இல்லையானால், நாம்பெருமைப்படக்கூடிய நம்முடைய பழமையான பண்பாடு பூராவும் அழிந்துபோவது மட்டுமன்றி, ஹிந்து கிறிஸ்துவ மகம்மதிய மதங்களின் புனிதமான கௌரவத்தையும் பாதிப்பதாகிறது. பழமையை எவ்வளவு தூரம் கைவிடலாம், புதுமையை எவ்வளவு தூரம் அனுஷ்டிக்கலாம்—என்பதற்கு ஒருவரம்பு, ஒரு நிர்ணயம், அடிப்படையான ஒரு நியாயக் கொள்கை எற்படுவது அத்தியாவசியமாகிவிட்டதல்லவா ?

இனி, நம்நாட்டின் விவாகக் கொள்கை எப்படியுள்ளதென்று கவனிப்போம்.

---


## சந்தாநேயர்கள் அவசியம் கவனிக்கவும்

1. உங்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால் 28-ந் தேதிக்குள் தெரிவிக்கவும்.

2. இந்தியாவிலுள்ளவர்களுக்கு 10 தேதிக்குப் பிறகும், ஸிலோனிலுள்ளவர்களுக்கு 15-தேதிக்குப் பிறகும் சஞ்சிகை கிடைக்காவிடில் உடனே எழுதவும் அடுத்த இதழ் வந்தபிறகு எழுதினால் இனாமாக அனுப்பமுடியாது.

# உதயசூரியன்

### 3. மங்களபுரியின் மூன்று திலகங்கள்.

“பிரார்த்தனை செய்வது மானிடரின் கடமை. அதற்குப் பலனளிப்பது பகவானின் திருவுள்ளம். மைத்ரேயி! உங்கள் அந்தப்புரத்தில் மாத்திரமில்லை; இங்கும், எங்கும், எல்லோரும் ஒரேவிதமாகத்தான் வேண்டுகிறார்கள். நாள் செய்வது நல்லாரும் செய்யார் என்று சொல்வதில்லையா? எப்படியாவது இந்த மூன்று நாட்கள் தள்ளிவிட்டால் போதுமானது; பிறகு வரிசையாக நல்ல நாட்கள்தான்” என்றார் ஸ்ரீவத்ஸர். மைத்ரேயியிடமும், மந்திரி குணசேகரனிடமும் தமக்குள்ள ஒரு அந்தரங்க பிரீதியும், விசேஷ மதிப்புமே குரு ஸ்ரீவத்ஸரை அவர்களுடன் அடிக்கடி பல விஷயங்களைக் குறித்தும் தனித்துப் பேசத் தூண்டும். அதேபோலத்தான் இன்றும் ராணியாரின் தேகநிலையை, பிரஸவ காலத்தைக் குறித்து மைத்ரேயியை விசாரிக்கலானார்.



"ஸ்வாமி! எனக்கென்னவோ கவலையாகத்தா... மூன்று நாட்கள் தள்ளாதென்றே தோன்றுகிறது... இன்றே அல்லது நாளைக்குப் பிரஸவமாகிவிடுமென்றே நி... றேன். வரிசையாக இந்த மூன்று நாட்களும் நன்றாயில்லையென்று தாங்கள் தெரிவிப்பதால் என் மனம் சஞ்சலப்படுகிறது. பகவானின் திட்டம் எப்படியிருக்கிறதோ! என்ன குழந்தை, எந்த வேளையில் பிறக்கப்போகிறதோ! எல்லோரும் க்ஷேமமாகவும், நம் சமஸ்தானம் சுபிக்ஷமாகவும் இருந்தால் போதுமானது" என்றாள் மைத்ரேயி.

"இராப்பகலாக எல்லோருக்கும் இதுவேதான் கவலையும், பிரார்த்தனையும்" என்று குணசேகரன் சொல்கையில் அந்தப்புரத்திலிருந்து மைத்ரேயியை அழைத்துச்செல்ல ஒரு சேவிகை ஓடோடியும் வந்தாள்.

* * * *

"ஸ்வாமி! மைத்ரேயி பயந்த பிரகாரமே ஒருவேளை இன்றே பிரஸவமாகிவிடுமோ என்னவோ தெரியவில்லையே! இதனால் கெடுதல் ஒன்றும் வராதிருக்க வேண்டுமே! இன்று விடியற்காலை ஒரு துர்ச்சொப்பனம் கண்டேன். அதுவே என்னை மிகவும் கலவரப்படுத்திக்கொண்டிருக்கையில் இந்த மூன்று நாட்களுள் பிரஸவமானால் கெடுதல் நேரிடும் என்று தாங்கள் சொல்லியது என் மனதையும் மூளையையும் இன்னும் குழப்பிவிட்டது. தவிர மைத்ரேயி சொல்லியதற்குச் சரியாக அவசரமாக ஆள் வந்து அவளை அழைத்துச் சென்றது இன்னும் வேதனையைத்தான் உண்டாக்குகிறது" என்று தவித்தான் குணசேகரன்.

"குணசேகரா! கவலையுறாதே! ஸ்வப்பனத்தில் கண்டதைக் கொண்டு வீணாகப் பயப்படாதே. எல்லாம் நல்லபடியே நடக்குமென்ற நம்பிக்கையில் பகவான்மீது பாரத்தைப்போட்டு நா... தைரியமாக இருக்கவேண்டுவதுதான் நமது கடமை. நீ இவ்வா... கவலைப்படுவது மகாராஜாவுக்குத் தெரிந்தால் அவரும் கலவர... பட்டுத் தவிப்பார். வாழ்க்கைப் படகு அமைதி எனும் சாகரத்தி... செல்லும்வரை கஷ்டமோ, கவலையோ இல்லை; தமுறிக் கொந்தளிக்கு... கடலில் சிக்கினால்? அதன் கதி எப்படியென்பது பரந்தாமனுக்கே தெரியும். அதேபோலத்தான் ஒவ்வொன்றும்"...என்றார் ஸ்ரீவத்ஸர்.

* * * *

அரண்மனை எங்கும் ஆனந்தமும் ஆரவாரமும்; ஆனால் மூவரின் உள்ளங்கள்மட்டும் புயலிலகப்பட்ட சிறகுபோல் துடித்துக்கொண்டிருந்தன. மகாராணிக்குப் பிறந்திருக்கும் ஆண் குழந்தை தன்னுடன் குழப்பத்தையும் கஷ்டத்தையும் கொண்டு வந்திருப்பது அம்மூவர் தவிர மற்றெல்லோருக்கும் எப்படித் தெரியும்?

இம்மூவர் யாரென விவரிக்காமலே விளங்கும். மங்களபுரியின் திலகங்களான குரு ஸ்ரீவத்ஸர், மந்திரி குணசேகரன், தோழி மைத்ரேயி ஆகிய மூவரும் அரண்மனையின் ஒரு மூலையில் 'குச

மச'வென்று பேசுவது எல்லோருக்கும் எப்படித்தெரியும்? அது அரசனுக்கே தெரியாத விஷயமாயிற்றே !

* * * *

கருணாகரனிடம் உள்ளதை உள்ளபடிச் சொல்வதற்குஅஞ்சி "குழந்தை பிறந்திருக்கும் வேளையில் சில தோஷங்களிருப்பதால், சில சாந்திகளைச் செய்துப் பரிகாரம் தேடவேண்டும்" என்று ஸ்ரீவத்ஸர் லேசாகச் சொல்லிவிட்டார். ஜாதகத்தைக் கணித்துப் பார்த்ததில், தான் கண்டுகொண்ட விஷயங்களை ராஜனிடம் சொல்ல மனம் வரவில்லை. ஆனால் சும்மா இருக்கவும் மனம் இடங்கொடுக்கவில்லை. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் திண்டாடுவதுபோலிருந்தது அவரது நிலைமை. "குழந்தைக்கு ஒரு வயதாகும்வரை சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்று எச்சரித்தார். யார் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், யாருடைய விஷயத்தில் என்பதொன்றும் சொல்லவில்லை. "மைத்ரேயியைவிட குழந்தையை இன்னும் யாரால் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளமுடியும்? அவளிருக்கையில் ஒரு குறைவுமில்லை" என்று கருணாகரன் கூறும்போது ஸ்ரீவத்ஸரின் முகத்தில் 'அசடு' தட்டியதை அவன் கவனிக்கவில்லை. அவர் சொன்னதொன்று; இவன் அர்த்தம் செய்துகொண்டதொன்று; இது தான் உலக இயல்பு.

* * * *

விசேஷச் செய்தியுடன் குணசேகரன் ஸ்ரீவத்ஸரிடம் வந்து "ஸ்வாமி! ஸிம்மபுரி அரசர் பலவந்தசேனன் நமது மன்னருக்கும், இன்னும் சிலருக்கும் ஒரு விசேஷ விருந்து ஏற்பாடு செய்திருக்கிறாராம். அதற்காக ஒரு தூதன் அழைப்புப் பத்திரிகையுடன் வந்துகொண்டிருக்கிறானும். இது நமது ஒற்றர்கள் இப்போதுதான் கொண்டுவந்திருக்கும் செய்தி. விசேஷமோ, கல்யாணமோ ஒன்றுமில்லாமல் திடீரென ஒரு விருந்து வைப்பதற்குக் காரணம் விளங்கவில்லையே!" என்று ஆச்சரியப்பட்டான்.

ஆச்சரியப்படுவதற்கு இதில் ஒன்றுமில்லை. பலவந்தசேனனின் குணதிசயங்களைத் தெரிந்த யாவரும் இதில் ஏதோ ஒரு மர்மமிருப்பதை உணராமலிருக்க முடியாது. அவனே பெயருக்கேற்றவாறு பலமுள்ளவன். அவன் ஊரும் முரடர்கள் நிறைந்த ஸிம்மபுரி. ஜாக்கிரதையாகத்தான் இருக்கவேண்டும். வீண் சண்டைக்குக் கால் புராண்டும் விபரீத புத்தியுடைய ராஜபூஷணம் மந்திரியாயிருக்கும் வரையில் துர்யோசனைகளுக்குக் குறைவில்லை அவனுக்கு. இதை ராஜனிடம் தெரிவித்து உஷாராயிருக்கும்படி எச்சரிக்கை செய்துவிடு. தூதன் வந்ததும் நான் அரசனை சந்திக்கிறேன்" என்றார் ஸ்ரீவத்ஸர்.

* * * *

கருணாகரன் தனது அறையில் தனித்திருக்கையில் தூதன் வந்து மிக்க பணிவுடன் அழைப்புக் கடிதத்தைச் சமர்ப்பித்தான். அரசனும் ஆவலுடன் படிக்கலானான்.




கடிதத்தின் வாசகமே அபூர்வமாகத் தோன்றியது. தூதினுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்வித்து, தான் வருவதாகச் சொல்லி அவனை அனுப்பிவிட்டான்.

*　　　*　　　*　　　*

ஸ்ரீவத்ஸருக்கும், குணசேகரனுக்கும் சொல்லியனுப்பிவிட்டுத் தீவிரமாக யோசிக்கலானான் கருணாகரன்: "அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல இவன் உள்ளத்திலுள்ள தடுமாற்றம் இவனது எழுத்தில் நன்கு புலப்படுகிறது. சுயநலம், கபடம், துராகிருதம் முதலியவைகளுக்கு உறைவிடமாகிய ராஜபூஷணம், பலவந்தசேனன் முதலியவர்களின் யோசனைக்குத் தகுந்தவாறு தக்க முன்யோசனையுடன்தான் நாம் இருக்கவேண்டும். மதியை மதியால்தான் வெல்லவேண்டும்; வைரத்தை வைரத்தால்தான் அறுக்கமுடியும்...."

ஸ்ரீ. உ. வே. சி. கோ. பாஷ்யகார் ஸ்வாமி

ஸ்ரீ

சிங்கப்பெருமாள்கோவில்

# ஸ்ரீ பாடலாத்திரி லக்ஷ்மீ நரஸிம்மப்பெருமாள்

## தியான சுலோகம்

**வாமம் பாதம் ப்ரஸார்ய ச்ரிதகணமுதிதம் தக்ஷிணம் குஞ்சயித்வா**
**வாமோரு ந்யஸ்தஹஸ்தம் வரதமபயதம் பாணிநா தக்ஷிணேந**
**சங்கம் சக்ரம் ததாநம் சசிநிபவதநம் ஸர்வவந்த்யம் த்ரிநேத்ரம்**
**வந்தேஹம் பாடலாத்ரௌ விலஸித மநிசம் வஜ்ரதம்ஷ்ட்ரம்**
**[ந்ருஸிஹ்மம்**

(ப-ரை) வாமம் பாதம்—இடது திருவடியை
ப்ரஸார்ய—நீட்டி,
ச்ரிதகணமுதிதம்—சந்தோஷமடைந்த தன் பக்தகோடிகளையுடைய
தக்ஷிணம்—வலது திருவடியை [தான
குஞ்சயித்வா—மடக்கிக்கொண்டு, (இருப்பவரும்)
வாமோருந்யஸ்தஹஸ்தம்—இடது துடையில் வைத்த கையை
தக்ஷிணேந பாணிநா—வலதுகையினால் [உடையவரும்
வரதம் அபயதம்—வரத்தைக்கொடுப்பவரும் அபயமளிப்பவரும்
சங்கம் சக்ரம் ததாநம்—சங்கு சக்கரங்களை தரிப்பவரும்
சசிநிப வதநம்—சந்திரன்போன்ற திருமுகத்தையுடையவரும்
ஸர்வ வந்த்யம்—எல்லாராலும் ஸேவிக்கத்தக்கவரும்
த்ரிநேத்ரம்—மூன்று கண்களையுடையவரும்
பாடலாத்ரௌ—பாடலாத்ரியில்
விலஸிதம்—விளங்குகிறவரும்
வஜ்ரதம்ஷ்ட்ரம்—வஜ்ரம்போன்ற கோரப்பற்களையுடையவருமா
ந்ருஸிஹ்மம்—ஸ்ரீநரஸிம்மஸ்வாமியை [யிருக்கிற
அஹம்—நான்
அநிசம் வந்தே—எப்பொழுதும் ஸேவிக்கிறேன்.

**கருத்து:**—இங்கு ஸ்ரீ பாடலாத்ரியில் ஸ்ரீ நரஸிம்மப்பெருமாளை வீற்றிருந்த திருக்கோலத்தில் இடது திருவடியை நீட்டி தொங்கவிட்டுக்கொண்டும் வலது திருவடியை மடக்கிக்கொண்டும் இடது திருக்கையை இடது திருத்துடையின்மேல் வைத்தும், வலது திருக்கையால் அபயமளித்துக் கொண்டும் திருவாழி திருச்சங்குகளை மற்றுமிரண்டு திருக்கைகளால் தரித்துக்கொண்டும் சந்திரன் போன்ற திருமுக மண்டலத்துடனும் உக்ர நரஸிம்மனுதலால் த்ருடமான கோரப்பற்களுடன் எல்லாரும் ஸேவிக்கும்படி திருநெற்றியிலும் திருக்கண் கொண்டு ஸேவை ஸாதிக்கும் க்ரமத்தில் நான் ஸதா ஸேவிக்கிறேன்.

**ஸ்ரீமந் ந்ருஸிஹ்மவிபவே கருடத்வஜாய**
**தாபத்ரயோபசமநாய பவௌஷதாய**
**த்ருஷ்ணுரி வ்ருச்சிகஜலாக்நி புஜங்கரோக**
**க்லேச வ்யயாய ஹரயே குரவே நமஸ்தே ||**

(ப-ரை) கருடத்வஜாய—கருடனைக் கொடியிலுடையவரும்
தாபத்ரயோபசமநாய—மூன்றுவித தாபங்களை அழிப்பவரும்
பவௌஷதாய—ஸம்ஸாரத்திற்கு மருந்தாயும்


த்ருஷ்ணரி வ்ருச்சிக ஜலாக்னி
புஜங்கரோக க்லேச வ்யயாய — ஆசைச்சத்துரு, தேள், ஜலம், நெருப்பு, பாம்பு, வியாதி இவைகளாலுண்டாகும் கஷ்டத்தை நாசம் செய்பவரும்

குரவே—(உலகிற்கே) ஆசாரியனையும்
ஹரயே—ஸிம்மரூபங்கொண்டவராயுமிருக்கிற
ஸ்ரீமந் ந்ருஸிஹ்மவிபவே—ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்மஸ்வாமியாகிய
தே—தேவரின்பொருட்டு
நமஃ அஸ்து—நமஸ்காரம் இருக்கவேணும்.

கருத்து:—கருடத்வஜராயும், ஜனங்களின் ஆத்யாத்மிக ஆதி—பௌதிக ஆதிதைவிகமென்கிற மூன்றுவித தாபத்தையும் நாசம் செய்து ஜீவர்களை ஸம்ஸாரத்தினின்றும் மீட்டுவிடுகிறவராயும் பாம்பு முதலியதாலுண்டாகும் ஸகலவித கஷ்டங்களைப் போக்குகிறவராயும் எல்லாருக்கும் ஆசாரியனாக (குருவாக)வுமிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மஸ்வாமிக்கு என் நமஸ்காரம் இருக்கவேணுமென்று கருத்து.

ஸ்ரீந்ருஸிம்ம மந்திரத்தின் மகிமை இங்கு குறிக்கத்தக்கது.

## மாப்பிள்ளையின் முன்யோசனை




ஊரிலிருந்து வந்ததும் மாப்பிள்ளை பெட்டியைத்திறக்கும்போது வீட்டில் எல்லோரும் சுற்றிநின்று பார்ப்பது சகஜம். சென்னைக்கு வந்துள்ள இந்த மாப்பிள்ளையின் முன்யோசனையை என்னென்பது! தான் இருக்கப்போகும் 10 நாட்களுக்கு தனக்கு வேண்டிய சமையல்செய்யவும், வென்னீர்வைக்கவும் கட்டைக்கு சிரமமில்லாதிருக்கவேண்டுமென்று முன் யோசனையுடன் டிரங்குக்குள் பிடிக்குமளவு கட்டைத்துண்டுகளை அடுக்கிக்கொண்டு வந்திருக்கிறார்.

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி R. ஸ்ரீநிவாசன்.

# கோலம்

நம் இந்திய நாட்டில் உலவிவரும் பற்பல சிங்காரக்கலைகளில் கோலமும் ஓர் ஒப்புயர்வற்ற கலையாகும். "அடாராமா! கோலத்தைப்போய் இவ்வளவு பிரமாதப்படுத்துகிறாயே!" என்று நீங்கள் சொல்லக்கூடும். அப்படியல்ல "கோலம் போடுதல்" என்பது பாரதப்பெண்களின் குடும்ப நிர்வாகக்காரியங்களுள் பரம்பரையாக அனுஷ்டானத்தில் சேர்ந்ததோர் புனித காரியம். இதோர் புனிதகலை, அழகியகலை, உள்ளத்தை அள்ளும் அமுதக்கலை; ஒவ்வொரு இந்திய குலப்பெண்ணும் உதயகாலத்தில் துயிலெழுந்ததும் தன் வீட்டுமுன்புறம் ஜலம்தெளித்து பெருக்கி பரிசுத்தமாக்கி அழகழகான கோலங்கள் இட்டு அலங்கரிப்பதுதான் அவளது நித்திய காரியங்களில் முதன்முதல் செய்யவேண்டியவேலை, பிறகு துளசிமாடத்தின் முன்பும், சுவாமி அறையிலும் பக்தியுடனும் சிரத்தையுடனும் மெழுகி கோலமிட்டு அலங்கரிப்பாள். அதன் பிறகுதான் மற்ற அலுவல்களை கவனிக்கச்செல்வாள். நல்ல நாள், கிழமை, கலியாணம் கார்த்திகைகளிலோவெனில் குடித்தனப்பெண்டுகள் அனைவரும் நான் நான் என்று போட்டியிட்டவாறு வீடுமுழுவதும் மாக்கோலமிட்டு அற்புதமாகச் சித்திரித்து செம்மண்பூசி அலங்காரமயமாக்குவதில் கைதேர்ந்தவர்கள். மேலும் ஆரத்திதட்டுகளில் பலவர்ணவேறுபாடுகளுடன் அவர்கள் கோலமிட்டு சித்திரிக்கும் கைத்திறமையை எத்தனை விவரித்தாலும் மிகையே. நம் பெண்கள் விதவித வர்ணங்களைக்கொண்டு காகிதத்தின்மீது சித்திரம் வரையாதமாத்திரத்தில் அவர்களிடத்தில் கலாபிருசியே கிடையாதென்று எண்ணுவது சுத்த அறியாமை. நம்பெண்கள் இடும் புள்ளிகோலம் இழைகோலம், மணைகோலம், மாக்கோலம் முதலியவைகளில் காணப்படும் கிரமமும், முறையும், சரளபாவமும், பரஸ்பரசேர்க்கையும், அழகழகான வளைவு நெளிவுகளும் திறமைவாய்ந்ததொரு ஓவியன்கூட ஆச்சரியப்படத் தகுந்தவைகளாகவிருக்கின்றன. மேலும் இந்த கோலமிடும் திறமையைக் கொண்டே பலபெண்கள் பலவர்ண கோலமாவுகளைகொண்டு அழகழகான இயற்கைக்காட்சிகளையும், ராதாகிருஷ்ணன், ஸ்ரீநிவாசப்பெருமாள், லக்ஷ்மி, சரஸ்வதி, சுப்பிரமணியசுவாமி, இத்தகைய கடவுளின் திருவுருவங்களையும் சாக்ஷாத்காரமாகவும், மிக அற்புத வர்ண ஜோடிப்புடனும் கோலமிடுவதை நான் கண்கூடாகக் கண்டு களித்திருக்கிறேன். இவ்வித கோலமிடுவதில் நான் சொந்தமுயற்சி செய்ததுமுண்டு.

ஒவ்வொரு பெண்பள்ளிக்கூடத்திலும் 'கோல வகுப்பு' என்றொரு பிரத்தியேக வகுப்பை திறப்பதுடன் அப்பொப்பொழுது மாதர் சங்கங்களிலும் (Ladies Clubs) பெண்பள்ளிக்கூடங்களிலும், பொருட்காட்சிச் சாலைகளிலும் "கோலக்கலை போட்டிப் பந்தயம்"களை ஏற்படுத்திப் பரிசுகள் வழங்கிவந்தால் நம் இந்திய குலப்பெண்களுள் அழுந்திக்கிடக்கும் இந்த அற்புதக் கலை பொக்கிஷம் விரைவில் புத்துயிர்பெற்று வெளிப்பட்டு நாடெங்கும் ஒளிர் மிளிர்ந்து விளங்கி மக்களை மயக்குமென்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

"கோலம் ஒரு பழமையான வேலை. நவநாகரிகம் முதிர்ந்த இந்த யுகத்தில் கோலத்தைப்பற்றிப் பேசுவது சுத்த மடமை" என்று சிலர் எண்ணக்கூடும். நகரவாசிகளான நாகரிகப் பெண்கள் "வீட்டை மெழுகிக் கோலமிடுவது வாசற்கூட்டியின் கடமை. நமக்கேன் இந்த தண்டா!" எனலாம்;

ஆனால் அதேபோல்தான் பரதநாட்டியத்தையும் சில வருடங்களுக்கு முன்பு வரைக்கும் நம்நாட்டு மக்கள் அசட்டை செய்துவந்தனர். ஆனால் தற்பொழுது பரதநாட்டியத்தைப்பார்த்து ரஸிக்காதவர்களும்,புகழாதவர்களும் போற்றாதவர்களுமுண்டோ! இதேபோல் பிரிய சகோதரிகளே! பண்டை காலம் தொட்டு நம் நாட்டு மக்கள் மிகப் புனிதமாக போற்றிவரும் சிறந்ததும், சுலபமானதும், அழகியதுமான ‘கோலக்கலை’யை அலக்ஷியம் செய்யாமல் பாதுகாத்து, புத்துயிரளித்து, அழியா செல்வமாக்குவது கிருஹலக்ஷ்மிகளான உங்கள் கையில்தான் உள்ளது.

பட்டணத்துமாதர்கள்தான் “வீட்டை மெழுகிக் கோலமிடுவது, வாசற்கூட்டியின் கடமை. நமக்கேன் இந்த தண்டா” என்று எண்ணுகிறார்களே தவிர, தற்சமயம்கூட கோடிக்கணக்கான இந்திய மாதர்கள் இதையோர் புனிதகாரியமாக பாவித்து, ஆதரித்து, ஆராதித்தும்வருகிறார்கள். அவர்கள் யார்? ஒவ்வொரு இந்திய கிராமத்திலும் புகுந்து பாருங்கள். கோலமிடத் தெரியாத பெண் ஒருத்தியாவது உண்டா? நான்கு வயதிலிருந்தும் தன் பெண் குழந்தைக்கு கிராமப் பெண் ஆனவள் கோலக்கலையை கற்றுக் கொடுக்க தவறமாட்டாள். கிராமாந்தரங்களில் தினந்தோறும் கிழக்கு மானம் வெளுப்பதற்கு முந்தியே துயிலெழுந்து வீட்டு முன்புறம் ஜலம் தெளித்து சுத்தம் செய்து கோலமிட்டுக்கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான பெண்களையும், சிறுமிகளையும் நாம் ஒருமிக்கக் காணலாம். அந்த கண்கொள்ளாக் காட்சியை என்னால் விவரிப்பது சாத்தியமில்லை. கலியாணப் பருவம் பெற்ற பெண் ஒருத்தி “எப்போ வருவாரோ என் கலி தீர்க்க” வென்று இனிமையாகப் பாடிக்கொண்டே அதியற்புதமான கோலங்களிட்டு தன் திறமையை காட்டிக்கொண்டிருப்பாள். மற்றொரு வீட்டின் முன்புறம் தாயாரானவள் தன் ஐந்து வயது பாலகிக்கு ‘கோலக்கலை’யை கற்பித்துக்கொண்டிருப்பாள். இன்னொரு வீட்டு முன்புறம், இரு சகோதரிகளோ அல்லது சமவயதுடைய நேசிகளோ போட்டியிட்டுக் கொண்டு ‘கோலக்கலை’யில் தங்களுக்குண்டான திறமையை காட்டிக் கொண்டிருப்பார்கள். அதுவும் பண்டிகை நாட்களில் பார்க்கவேண்டுமே! பண்டிகைகளுள் மிகப்பெரிய பண்டிகையான பொங்கல் பண்டிகையை வரவேற்கும் அடையாளமான மார்கழிமாதம் பூராவும் பார்க்கவேண்டுமே அந்த கொம்மாளத்தை! கிராமம் பூராவும் ஒவ்வொரு வீட்டு முன்புறமும் மங்களகரமான செம்மண்ணுடன் கூடிய அலங்காரக் கோலங்களும், அவைகளின்மீதுவீற்ருக்கும் சக்கரைப்பூஷணிப் பூக்களும் பார்க்க ஒரே அலங்காரமயமாகவிருக்கும். கிராமம் பூராவும் அழகு தேவதை தாண்டவமாட, பக்ஷிஜாலங்களின் தீங்கானமானது மாதர்களின் இன்பக் குரலுடன் கூடி இசைய, உதய சூரியனின் இளங் கதிர்களால் தோய்க்கப்பட்டு, அழகுக்கு அழகுசெய்தாற்போலிருக்கும். கல்யாணங் கார்த்திகளில் ஆகட்டும், கோலமிடாமல் மணைவராது; மணைபோடாமல் மணமகளும் வராள். இத்தனை சுபகரமான புனிதக்கோலத்தை வீட்டு முன்புறம் போட்டு அலங்கரித்திராவிட்டால், இந்து தர்மத்தில் அசுபத்தைக் குறிப்பதேயாம். கோலமிடப்படாத வீட்டு வாசல்முன் பிச்சைக்காரன்கூட வரமாட்டான். மங்களகரமான எக்காரியத்திலும் கோலமே முதன் முதலில் விஜயம் செய்யக்கூடியது. சிறு குழந்தைகள் பென்சிலையும், பலபத்தையும் பிடித்து எழுதக் கற்றுக்கொள்வதைவிட கோலப்பொடியை உபயோகிப்பதால் வெகு சுலபமாகவிருக்கும். கோலப்பொடிக்கு நம் இந்திய நாட்டில் பஞ்சமில்லை. எந்த பிரதேசத்திலும் எதேஷ்டமாகக் கிடைக்கிறது. மேலும் கோலம் கற்பது கடினமான கல்வியுமல்ல. ஏதோ சில நல்ல வழிகளை

மற்ற பெரியாரிடத்திலிருந்து கற்றுக்கொண்டுவிட்டாலும் போதும் அல்லது தாமே கிரகித்துக்கொண்டாலும் போதும். இதற்காக ப்ரத்யேகமாக சிக்ஷைபெறவேண்டிய அவசியமில்லை. அவரவர்களின் புத்திநுட்பத்தைக் கொண்டு அவரவர்கள் தேர்ச்சியடைந்து இந்த அழகிய கலையை சிறப்புற முன்னேற்றமடையச் செய்வது பிரதியொரு இந்தியப் பெண்ணின் பொறுப்பு. இனியாகிலும் நம் நாட்டுப்பெண்மணிகள் கோலத்தை அசட்டையுடன் நோக்காமல் அதைப் போற்றி, உயிர்ப்பித்து உலகுக்கே மிகச் சிறந்த கலை என்ற பெயரையும், புகழையும் அதற்குச் சூட்டி இன்புறுவார்களாக. மங்களம்.

குறிப்பு:—இப்பரிசுத்தமான கலையின்மூலம் பெரியார்கள் நமக்குக் காட்டியுள்ள மேன்மையான முக்திமார்க்கத்தைக்காண எவ்வளவு ஆனந்தம்பொங்குகிறது. மனிதப்பிறவிக்கு எடுத்தது தானமும் தருமமுந்தான் முக்யம். அந்தத்தருமத்தை ஒவ்வொருவரும் தூங்கிவிழித்த உடனேயே கோலத்துடன் துவக்குகிறோம். கோலமிட்டவுடனே காக்காய், குருவி, எறும்பு, ஈ முதலிய ஜீவன்கள் அக்கோலத்தின் மாவைத்தின்றுப் பசியாறுகின்றன. அழகுக்கு அழகு. சுபத்திற்கு சுபம். தருமத்திற்குத் தருமம். கைத்திறமைக்குத்திறமை. இத்தனையும் ஒரு கோலமிடும் கலையில் பொதிந்துகிடக்கிறது. இந்த அபூர்வமான விஷயங்களை அறியாமல் அனேக வீடுகளில் சிக்கனத்தின்காரணமாக காரைமாவைக்கொண்டு கோலமிட்டு மேற்குறித்த ஜீவராசிகளின் சாபத்திற்கு ஆளாவதைக்காண பரிதாபப்படுவதா ! மதியின்மையை எண்ணி கோபிப்பதா? சில புண்ணியவதிகள் ஸ்வாமி கோயிலிலும் காரைமாவையே இடுவதைக்கண்ணுல் பார்த்து மனது துடித்தேன். தினம் ஒரு பிடி அரிசிமாவைத் தானம்செய்வதனுல் எந்த குடிதான் முழுகிவிடும்? அதில்காட்டும் சிக்கனத்தை வேறு எதிலாவது காண்பித்து இப்புனித தருமத்தை ஏன் செய்யக்கூடாது? —வை. மு. கோ.

---

**உண்மைச் சித்திரம் 7.** **வை. மு. கோ.**


# பெருமாள் ப்ரத்யக்ஷம்

பண்டிகை என்றுலே எல்லோருக்கும் கொண்டாட்டம். அதிலும் க்ருஷ்ணஜயந்தி என்றுல் குழந்தைகளுக்குக் கேட்கவேண்டுமா ! பலவித பலகாரங்கள் சாப்பிடலாம் என்கிற ஆசை அலைமோதாதா?... எனது சிறிய பிராயத்தில் சுமார் 5, 6 வயதிருக்கும் என்று எண்ணுகிறேன். தடபுடலான பக்ஷணங்களுடன் ஸ்ரீஜயந்தி பண்டிகைக் கொண்டாட்டம் இரவு 8 மணிக்கு முடிந்தது. பொழுதுவிடிந்ததும் ஒவ்வொருவரும் ஒவ்வொருதட்டை தூக்கிக்கொண்டு பக்ஷணம் கேட்டு வாங்கித் தின்றேம். த்ருப்தி உண்டாகவில்லை. இன்னும், இன்னும் என்று என் பாட்டியைத் தொந்தரவு செய்தோம். பாட்டிக்குக் கோபம் வந்தது. 'பக்ஷணமெல்லாம் உம்மாச்சி தின்றுவிட்டது' என்று மிரட்டினுள். 'இல்லவே இல்லை. எல்லாம்பக்ஷணப் பெட்டியில் இருக்கிறது.' என்று நான் வாதம் செய்தேன். அதற்கு இரண்டு அடியும் திட்டும் கிடைத்தன. அப்போது அந்த பக்ஷணத்துடன் பேசாதிருந்து விட்டேன். அன்று பிற்பகல் நாலுமணிக்கு 'பக்ஷணம் வைக்கும் அறையில் நிஜமாகவே உம்மாச்சி (பெருமாள்) சாப்பிடுகிருரா! பார்க்க வேண்டும்' என்று ஆசை. நானும் என் தம்பியும் ஓசைசெய்யாமல்பக்ஷண உள்ளே பூனைபோல்போய் பெட்டியருகில் நின்றேம். முறுக்கு,சீடை,தேன்குழல், மனஉகப்புமுதலிய பலதாரங்களைக் கடுக்கு, முடுக்கு என்று கடித்துத் தின்னும் ஓசை கேட்டு திடுக்கிட்டு "ஆ ! உம்மாச்சி நிஜமாகவே சாப்பிடு

கிறார். பாட்டி பொய்சொல்லவில்லை." என்று சந்தோஷமாக எண்ணி பாட்டியிடம் ஓடி இதைத் தெரிவித்தேன். பாட்டி என் கூடவே வியப்பே வடிவமாக வந்து பிப்பாயில் பார்த்தாள். ஆம், உம்மாச்சிதான். எங்கள் சமயல்கார ரங்கன் பக்குவமாக பெட்டியிலிறங்கி உட்கார்ந்து கடுக்கு முடுக்கு என்று அமுதுசெய்வதைக் கண்டு பாட்டியின் கோபம் உச்சத்தையடைந்தது உம்மாச்சி எங்கள் ரங்களுக்வே இருப்பதைக் காண எங்களுடைய சிரிப்பும் வேடிக்கையும் கூட ஆகாசத்தையே எட்டியது. அந்த காட்சி ப்ரதி ஸ்ரீ ஜெயந்தியிலும் நினைவு வராமலிருப்பதே இல்லை.




"ஸர்வம் கட்டை மயம்"



# மதிப்புரை

## கதைக்கோவை. 3-வது தொகுதி

கிளேஸ் பதிப்பு. 7-8-0 ஆண்டிக் பதிப்பு. 9-0-0

ஏற்கெனவே இரண்டு கதைக்கோவைகள் வெளியிட்டிருக்கும் அல்லயன்ஸ் கம்பனியார் இந்த மூன்றாவது கோவையையும் வெளியிட்டிருப்பது, புதுமைத் தமிழிலக்கியத்திலே சிறு கதை எழுதும் கலை எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறது என்பதற்கு ஓர் அறிகுறியாகும். இத் தொகுதியில் அறுபது சிறு கதைகள் அடங்கியிருக்கின்றன. இப் புதுமைக் கதைகள் எழுதியிருப்பவர்களின் ஜாபிதாவில் இதுவரை அவ்வளவு பிரசித்தமாய்த் தெரிந்திராத புதுமைப்பெயர்களும் காணப்படுகின்றன. மொத்தத்திலே அஞ்சில் ஒரு பங்கு எழுத்தாளர்கள் பெண்மணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கோவையைப் படிக்கும்போது, இத்தனை கதைகளையும் தேர்ந்தெடுத்துத் தொகுத்து வெளியிட்ட பெருமுயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. எத்தனையோ கவலைகளுக்கெல்லாம் காரணமாயிருக்கும் இந்த யுத்தகாலத்திலும் தமிழில் நல்ல புஸ்தகங்கள் நல்ல உருவத்திலும் வந்து கொண்டிருக்கின்றன என்பது எவ்வளவோ ஆறுதல் அளிக்கின்றது. -பி. ஸ்ரீ.

## அதுவும், இதுவும்,

உணவும் சுகவாழ்வும் என்ற பிரச்னை எவ்வளவு முக்கியமானது! சுவரை வைத்தல்லவோ சித்திரம் எழுதவேண்டும்? எனினும் படித்தவகுப்பினரில் பலரும் இந்தப் பிரச்னையைக் குறித்துச் சிந்திப்பதில்லை; சிந்திக்கவும் நேரமில்லை. கலியாண தடபுடலில் தாலிகட்ட மறந்ததுபோல் தற்கால வாழ்க்கைத் தடபுடல்களில் "நாம் எதைச் சாப்பிடுவது? எப்படிச் சாப்பிடுவது? நமது நாட்டின் போஷிப்பு நிலைமை என்ன?" என்ற முக்கியமான விஷயங்களை மறந்துவிடுகிறோம். இந்த நிலையில் "காப்டன் சேஷாத்ரிநாதன்" நமக்காக இந்த வினாக்களுக்கு விடைகண்டு ஓர் அருமையான சிறு நூலை அளித்திருக்கிறார். "வைடமின், வைடமின்" என்று கிராமங்களிலும் இந்நாளில் தெரிந்திருக்கிறதே. அந்த ஏ, பி, ஸி, டி, வைடமின்களின் சரித்திரம் இந்நூலில் இனிது விளக்கப்படுகிறது.

கைகுத்தல் அரிசியும், மில் அரிசியும் ஒன்றுக்கொன்று எவ்வளவு தூரம் போஷிப்புச் சக்தியில் வேறுபட்டவை என்பதும் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிந்து கொள்ளவேண்டியதுதான். அரிசி, தன் ஜீவசத்தை இழக்கும்படி அதை மில்லில் குத்துவதும் அதிகமாகத் தீட்டுவதும் எவ்வளவு தவறானது என்பதை இந்திய ஊழிய சங்கத்தினர் ஒருவர் ஒரு சிறு புஸ்தகத்திலே தெளிவாக விளக்கியிருக்கிறார்.

தோட்டக்கலையை அபிவிருத்திசெய்வது நமது உணவுப் பிரச்னையில் ஒரு முக்கியமான அம்சம். காய்கறித்தோட்டங்களும், பழத்தோட்டங்களும் அதிகரித்தால் உணவுப்பஞ்சம் ஓரளவு தீர்ந்துபோகாதா? இவ்விஷயமாகச் சென்னை சர்வகலாசாலையின் பரிசுபெற்ற ஓர் அருமையான புஸ்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழில் இத்தகைய புஸ்தகம் அபூர்வமானது, "அளவுகோல்"


டியாவும் அல்லயன்ஸ் கம்பெனி, பிரசுரங்கள் மயிலாப்பூர்.

## "கையால் காகிதம் செய்தல்"

ஸ்ரீமான் மு. குருசாமிநாயுடு. விலை அணா 10. ஜுபிடர் டிரேடிங்கு கம்பெனி, அக்பராபாத், P. O. கோடம்பாக்கம். S. I. R.

குடிசைத்தொழில்களில் முன்னணியில் நின்று, தன் தேவைக்குமீறி உற்பத்திசெய்து வெளிநாடுகளுக்கும் அனுப்பிப்புகழ்பெற்ற நம் பாரத நாட்டில் துரதிர்ஷ்டவசத்தால் அவை க்ஷீணித்தன. காந்திமஹானால் புத்துயிர்பெற்றவைகளில் கையால் காகிதம்செய்தலும் ஒன்று. காகிதப் பஞ்சம் தலைவிரித்தாடும் இக்காலத்தில் இது எவ்வளவு அவசியம் என்று நாம் சொல்லாமலே விளங்கும். தன் சொந்த அனுபவத்துடன் எழுதிய இந்த புத்தகத்தைப்படித்து சௌகரியமுள்ள இடங்களில் இத்தொழிலை நடத்தி தேசத்திற்கு உதவுவது அவசியம். தம்சொந்த தொழிற்சாலையிலேயே தயார் செய்த காகிதத்தில் அச்சிட்டிருப்பது போற்றத்தக்கது. வை. மு. பா.

# இந்த மாதம்



# டில்லி வைபோகம்

[இந்தத் தலைப்பின் கீழ் வெளிவந்த மூன்று கடிதங்களை ஆண்டு மலரில் படித்துக் களித்தீர்கள், மற்ற கடிதங்களை இங்கு கண்டு மகிழுங்கள் ...ப-ர்.]

183089

## IV

மதராஸ், அக்டோபர்...

அன்புள்ள சீதாவுக்கு, உன்னிடமிருந்து பத்துநாளாகக் கடிதமே வரவில்லை. கவலையாக இருக்கிறது டில்லி சேர்ந்த புது மும்முரத்தில் வரிசையாக மூன்று கடிதங்கள் எழுதினாய்; அப்புறம் கப்சிப்—தகவலே ஒன்றும் காணுமே! உன்னிடமிருந்து வந்த கடைசி கடிதத்தில் பழய டில்லி வீதிகளைப் பார்த்த களைப்புக்கு மூன்றுநாள் ஒப்ச்சல் வேண்டுமென்று எழுதி இருந்தாய். இன்னும் களை தீரவில்லையா?

நீ என்னைக் கேட்கலாம்—ஏன் நான் எழுதவில்லை என்று. இதுவரை எனக்கு மூச்சுவிட நேரமில்லை. வீட்டில் இருந்த சமையற்காரன் ஏதோ கலியாணம் என்று பொய்சாக்கு சொல்லிக்கொண்டு போய் விட்டான். இங்கே சமையல்காரன் பாடு திண்டாட்டமாக இருக்கிறது. அங்கே, உங்கள் வீட்டில் சமையற்காரன் வைத்திருக்கிறாயா? வீடு ஏதாவது சௌகரியமாக கிடைத்ததா? முன் இருந்த ஒண்டிக் குடிதானா? நீ உடம்பு சௌக்கியமாக இருக்கிறாயா? எல்லாவற்றிற்கும் விவரமாக, உடனே பதில் போடு.

இப்படிக்கு,
ராஜம்.

183089

## V

புதுடில்லி, அக்டோபர்...

அன்புள்ள ராஜத்திற்கு, உன் கடிதம் கிடைத்தது. என்றைக்கும் எதிலும் நீ சிக்கனக்காரி. கடிதம் எழுதுவதில்கூட உன் சிக்கனம் தெரிகிறது. நான் ஏன் அப்புறம் எழுதவில்லை என்று பாகாசமாகக் கேட்கிறாய். எழுத முடிந்திருந்தால், சளைப்பவள் நான் இல்லை. நீ மூன்று கேள்விகள் கேட்டிருக்கிறாய். முதலாவது சமையற்காரன், இரண்டாவது வீடு; மூன்றுவது தேகசௌக்கியம். இந்த மூன்றும்தான் நான் கடிதம் எழுதுவதற்குக் குறுக்கே நின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமையற்காரன் சங்கதியே ஒரு புராணம். இங்கே வந்ததும் அவர் நம் ஊர் ஆள் ஒருத்தனை 30 ரூபாய் கொடுத்து வைத்திருந்தார். அந்த ஆசாமி ஒரு வாரத்துக்கெல்லாம் அவரிடம் வந்து, "நமக்கு இங்கே இருக்க சௌகர்யமில்லை" என்று நோட்டீஸ் கொடுத்தான். அவனுக்கு இங்கே என்ன அசௌகரியம் என்று விசாரித்ததில், நான்தான் ஒரு பெரிய அசௌகரியம் என்று தெரியவந்தது. அவன் பெண்டுகள் இருக்கிற வீட்டில் வேலை செய்யமாட்டானும். அவனைக் கணக்குவழக்கு கேட்டது பிசகாம். சமையலறைக்குள் அவன் இருக்கும்போது போக எனக்கு சுதந்திரம் இல்லையாம், சங்கடமான சமையல் வேலையை விட்டுவிட்டு அவன் வேறு எங்கேயோ உத்யோகத்துக்குப் போகப்போகிறானும். இத்தனை வைராக்கியமும், வீட்டுப் பெண்டுகளால் வந்ததாம். இனிமேல் இந்த ஊரில் சமையற்காரன் வேண்டுமென்றால் பெண்டாட்டியை ஊருக்கு அனுப்பியோ தள்ளிவைத்தோ விடவேண்டும்போலிருக்கிறது! அவருக்குக் கோபம் வந்து அவன் கணக்கைத் தீர்த்து மூஞ்சியில் எறிந்து போகச்சொன்னார்.

அடுத்தாப்போல் ஒரு பிராமணன் வந்தார். அவர் இண்டர்மீடியட் படித்தவராம். பிள்ளை குட்டிக்காரராம்; ஆபீஸ் குமாஸ்தா வேலையைவிட சமையல் வேலைதான் கௌரவமென்று இங்கு வேலைக்கு வந்தாராம். வந்த அன்றே இவரோடு இங்கிலீஷில் பிளக்க ஆரம்பித்தார். இந்த மனுஷருக்கு சில விசேஷ குணங்கள்—இவருக்கு வெளி அலுவல்கள், ஜோலிகள் அதிகம். ஒருநாள் காலை ஒன்பதுக்குமேல் இவருக்கு வெளியில் ஜோலிகள் இருக்கும். அதற்காக காப்பிபோட்டு முதலில் தான் சாப்பிட்டுவிட்டு, பிறகு எங்களுக்கு வைத்துவிட்டு அவசரமாக வெளியே போய்விடுவார். சாயங்காலம் நாலுமணிக்கு வந்து, "இன்னும் காப்பி போடவில்லை?" என்று என்னை அதிகாரம் செய்வார். சில நாள்கள் இவருக்கு சாயங்காலம் சீக்கிரம் போகவேண்டி வந்தால், ஐந்து மணிக்கே சாப்பாட்டுக்கடை முடிந்துவிடவேண்டும். இது தவிர இவருக்கு சில ஜன்மசத்ருக்கள் உண்டு. அவர்கள் யார் தெரியுமா? எங்கள் சிநேகிதர்கள் — அல்லது வீட்டிற்குச் சாப்பிடவரும் அதிதிகள். யாராவது தெரிந்தவர்கள் வீட்டிற்கு டிபனுக்கோ, சாப்பிடவோ வருகிறார்கள் என்றால் சமையற்கார ஸ்வாமிக்கு முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடித்துக் கொட்டும். "யார் வரா! எத்தனைபேர்? எப்போ!" என்று அதிகாரமாகக் கேட்பார். அன்றைக்கு வேண்டுமென்று, உப்பு, புளி மிளகாய் எல்லாம் சாப்பாட்டில் தாராளமாகக் காணப்படும். போதாதற்கு, வருகிறவர்களுடன் இங்கிலீஷில் வாதாட ஆரம்பித்துவிடுவார். இவருக்கும் நமக்கும் சரிப்படாது என்று இவரையும் அனுப்பிவிட்டோம். அப்புறம் ஒரு சின்ன ராயர் பையன் வந்தான். அவனுக்கு எப்போதும் அகாதப் பசி. அடுப்பில் சமையல் ஆகிக்கொண்டிருக்கும்போதே வெந்ததும் வேகாததுமாகச் சாப்பிட்டுக்கொண்டிருப்பான். அவன் வந்தபிறகு சில்லரை சாமான்கள் ஒவ்வொன்றாக மறைய ஆரம்பித்தன. இவர் பித்தான்கள், க்ஷவர பிளேடுகள், நெருப்புப்பெட்டி முதலிய சாமான்கள் அவன் பையில் எப்படியோ போய் மறைந்துகொண்டன. ஒருநாள் சமையலறையிலேயே பீடி பிடித்துக்கொண்டிருப்பதை இவர் பார்த்தார். உடனே வெளியில் விரட்டிவிட்டார், கடைசியாக இந்த தெற்கத்தி ஆள்கள் போதுமென்று வடக்கத்தியானை தேடிப்பிடித்தார். அவன் வரும்போதே, "பாத்திரம் தேய்க்கமாட்டேன், நீங்கள் குடிக்கும் டம்ளர் கழுவமாட்டேன், துணி துவைக்கமாட்டேன், இது செய்யமாட்டேன், அது செய்யமாட்டேன்" என்று சொல்லிக்கொண்டுவந்தான். கடைசியில் பார்த்தால், அவன் செய்யக்கூடிய வேலை ஒன்றுதான் என்று தெரிந்தது. அவன் தனக்கு வேண்டிய சப்பாத்தி தட்டி, தானே சாப்பிடுவான் என்பது, இதற்காக சம்பளம் கொடுத்து அவனை வைத்திருப்பானேன் என்று அவனையும் நிறுத்திவிட்டோம். போகிற போக்கில் அவன் பர்ஸையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். இனிமேல் சமையற்காரனே வைப்பதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். அவர்கள் இல்லாதிருப்பதே நல்லது. சாமான்கள் மிச்சம்; நம் கௌரவம் மிச்சம். இப்போது ஒரு 'முண்டு' சுற்றுக் காரியங்களுக்கு வைத்திருக்கிறது (இந்த ஊர் வேலைக்காரப் பையன்களுக்கு, "முண்டு" என்று பெயர், ஆள்களும் பார்த்தால் அப்படித்தானிருக்கிறார்கள்.)

சமையற்காரன் சங்கடம் இப்படி என்றால் வீட்டு அல்லாட்டத்தை என்ன என்று சொல்வேன்? போனமாதக் கடைசியில் அநேகமாகத் தெருவில் நிற்போமோ என்று ஆகிவிட்டது. இந்த ஊரில் சர்க்கார் வீடுகள் இல்லாதவர்களுக்கு வாடகை வீடுகள் கிடைப்பது குதிரைக்கொம்புதான்.

கிடைத்தாலும், ஒரு அறை இரண்டு அறை வீட்டிற்கு 50, 60 வாடகை அதை ஒரு வருஷத்துக்கு முன்னாலேயே அட்வான்ஸாகக் கொடுக்கணுமாம். அதற்கு ரசீதுகூடக் கொடுக்கமாட்டார்களாம். வாடகைக்கு வீடு விடும் பிரபுக்களைப் பற்றி இங்கே உலவும் கதைகளைக் கேட்டால் நீ பயந்துபோய் விடுவாய், அவ்வளவு நல்ல பேர்வழிகளாம்.

வருஷாவருஷம், இரண்டுதரம் சர்க்கார் தங்கள் கட்டிடங்களை "அல்லாட்" செய்வார்களாம். இந்த "அல்லாட்டம்" வாஸ்தவமான அல்லாட்டத்தில்தான் முடிகிறது. இந்த அல்லாட்டத்திற்காக, வருஷக் கணக்காக தவங்கிடந்து ஏமாறுகிறவர்கள் பலர். நாங்கள் இருக்கும் வீட்டுக்காரர் பாடு லாட்டரியாகிவிடும்போலிருந்தது. போனமாதம் 30-ந் தேதியே நாங்கள் இந்த வீட்டை காலிசெய்யவேண்டும் நிலைமைக்கு வந்து விட்டது. பாவம், இந்த வீட்டில் இருப்பவர்களுக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை, தெருவில் நின்றிருப்போம். ஏதோ எங்கள் அதிர்ஷ்டம் கடைசிநாள், இந்த வீடே திருப்பி அவருக்குக் கிடைத்தது. நாங்களும் அந்த அதிர்ஷ்டத்தில் பிழைத்தோம்.

கடைசியாக தேக சௌக்கியத்தைப்பற்றி கேட்கிறாய். இவ்வளவு கலாட்டாவில் இவருக்கு ஒருவாரம் குளிர்ஜுரம் வந்துவிட்டது. எனக்கு வயிற்றுவலி. இந்த ஊரில் ஸீஸனுக்கு ஸீஸன் ஒரு வியாதி வருமாம். போனமாதம் வரையில் மலேரியா ஸீஸன். அடுத்த சில மாதங்களுக்கு இன்புளுவன்ஸா முதலிய ஜுரங்கள். அப்புறம் குளிர்காலம் வந்தால் ரொம்ப நன்றாயிருக்கும், வியாதிகளே இராது என்கிறார்கள். என்னமோ போகப்போகத்தான் தெரியவேண்டும்.

இப்போது, சத்தியாக, எங்களுக்கு உடம்பு தேவலை. மழை கொஞ்சம் பெய்து நின்றிருக்கிறது. இனிமேல் குளிர் ஆரம்பிக்குமாம். பார்க்கிறேன் அதையும்; மறுபடி எழுதுகிறேன். நீயும் அந்த ஊர் சங்கதி எல்லாம் எழுது.

இப்படிக்கு
சீதா

## VI

மதராஸ், அக்டோபர்

அன்புள்ள சீதாவுக்கு, உன் விவரமான கடிதம் கிடைத்தது. சமையற்காரன் சங்கதி எல்லாம் தெரிந்துகொண்டேன். இங்கேயும் அந்த சங்கடம் தான். வீட்டுக்கு வீடு வாசற்படிதான். எப்படியோ பொறுத்துக்கொண்டு காலக்ஷேபம்செய்து வரவேண்டியதுதான்.

தீபாவளி வந்துவிட்டதே ! நீ என்ன புடவை வாங்கி இருக்கிறாய்? இங்கே இவர் இன்னும் ஒன்றும் வாங்கவில்லை. பட்டுப்புடவை ஒன்றுக்கு மூன்று விலையாயிருக்கிறது. என்ன செய்வது தெரியவில்லை. டில்லியில் நல்ல நூல்புடவை, அச்சுப் போட்டது கிடைக்குமே, உனக்கு வாங்கிக் கொண்டால் எனக்கும் ஒன்று வாங்கி அனுப்பு. டில்லியில் வேறு ஏதாவது நல்ல சாமானை இருந்தால் வாங்கி அனுப்பு. மற்றபடி இந்த ஊர் விசேஷமெல்லாம் எழுதச் சொல்கிறாய். இந்த ஊரில் இப்போது ஒரே மழை—அதுதான் விசேஷம். வேறுஒன்றுமில்லை.

இப்படிக்கு,
ராஜம்

## VII

மதராஸ், டிசம்பர்

அன்புள்ள சீதாவுக்கு, நீ ஏன் நான் எழுதிய கடிதத்திற்கு பதிலே போடவில்லை! அப்படியே டில்லியில் லயித்துப்போய்விட்டாயா? இல்லை

உடம்பு சரியாக இல்லையா? அங்கே குளிர் எல்லாம் எப்படி இருக்கிறது! இங்கேயும் குளிர் பனி ஆரம்பித்திருக்கிறது. இந்த வருஷம் இந்த ஊரில் சங்கீதக்கச்சேரிகள் ஏக அமர்க்களமாக இருக்குமாம். நீ வந்துவிட்டுதான் போகிறதுதானே... நீ வராமல் எனக்கும் இதற்கெல்லாம் போகப்பிடிக்காது...வருஷா வருஷம் நாம்சேர்ந்து போய்க்கொண்டிருந்தோம்! இந்த வருஷம் என்னமோ வெறிச்சென்று இருக்கிறது. நீ கட்டாயம் வரவும்...

ராஜம்.

## VIII

புதுடில்லி, டிசம்பர்

அன்புள்ள ராஜத்திற்கு, நான் கடிதம்போடாததற்கு மன்னிக்கவும். உடம்பு கவலைப்படும்படி ஆனல்...அதை நேரில்வந்து சொல்கிறேன். இங்கே இந்தக்குளிர் எனக்குப்பொறுக்கவில்லை. எனக்கும் ஊருக்கு வரவேண்டும் என்று இருக்கிறது. அதுவும் வருஷாவருஷம் கச்சேரிகள் நான் தவறுவதில்லை. இந்த வருஷம் அங்கே போட்டிருக்கிற கச்சேரிகளைப் பார்த்தால் (பேப்பரில்கூட பார்த்தேன்) ஓடிவந்துவிடவேண்டும்போலிருக்கிறது, இவரைவிட்டு நான் எப்படி வருகிறது? லீவு எடுத்துக்கொள்ளச் சொன்னல் லீவு கிடைக்காது என்கிறர், அதுதவிர வருவது இந்தக்காலத்தில் லேசாக இருக்கிறதா? செலவு என்ன ஆகும்? ரயில் பிரயாணத்தை நினைத்தால் வேண்டாம்போலிருக்கிறது. ஆனல் கச்சேரிகளையும் உங்களையும் நினைத்தால் இருப்பேகொள்ளவில்லை, என்னசெய்கிறதென்று தெரியவில்லை.

இப்படிக்கு,

சீதா.

## IX

புதுடில்லி, டிசம்பர்

அன்புள்ள ராஜத்திற்கு, நான் 20 ந்தேதி புறப்பட்டு, அங்கே 22 ந் தேதி வந்து சேருகிறேன். அப்பாவிடமிருந்து இவருக்குக் கடிதம் வந்தது. இந்தமாதம் என்னை அங்கே அனுப்பும்படி கட்டாயம் எழுதியிருக்கிறர். துணையும் யாரோ தெரிந்தவர்கள் வருகிறர்கள்; அவர்களுடன் புறப்பட்டு வருகிறேன். மற்றவை நேரில்.

இப்படிக்கு,

சீதா.

## X

புதுடில்லி, டிசம்பர்—

பிரிய சீதாவுக்கு, நீ புறப்பட்டுப்போனது முதல் எனக்கு இங்கே இருப்பேகொள்ளவில்லை, எப்படியாவது லீவு எடுத்துக்கொண்டு வந்துவிட வேண்டும் என்றிருக்கிறது. அதுவும் நீ போகப்போகும் கச்சேரிகளை நினைத்தால் எனக்கு வேலையைக்கூட விட்டுவந்துவிடலாமா என்றிருக்கிறது. உன் வளைகாப்பு அடுத்தமாதம் என்று உன் அப்பா எழுதியிருக்கிறர். அதற்கு நான் வரவேண்டுமாம். பார்க்கலாம்...

இப்படிக்கு,

உன் சுந்தரம்.

(தந்தி)

புதுடில்லி, டிசம்பர் 24

ஒருமாதம் லீவு. கிடைத்தது: இன்று புறப்படுகிறேன்...

சுந்தரம்.

[சுந்தரம்—சீதா தம்பதிகளுக்கு பிறகு என்ன நேர்ந்தது என்பதை அவர்களுக்குப் பிறக்கப்போகும் குழந்தையை விசாரித்துத் தெரிந்துகொள்ளலாம். சுந்தரத்திற்கு மதராஸிலேயே வேறு ஒரு கம்பெனியில் பெரிய வேலை கிடைத்துவிட்டது என்பதுமட்டும் தெரிகிறது.]

ஸ்ரீமதி "குகப்ரியை"

# லீலாவதி

"அம்மா! வேறு எந்தப்பாடம் வேண்டுமானாலும் படிக்கிறேன். இந்தக் கணக்குமட்டும் வேண்டாம்" என்கிறார்கள் குழந்தைகள். வீட்டிலுள்ள பெரியவர்களோ "ஒழிந்த நேரத்தில் வாய்ப்பாடு சொல்லிக்கொடுத்தால் என்ன?" என்கிறார்கள். நமக்கோ வாய்ப்பாடு சொல்லுவதைவிட விளக்கெண்ணெய் சாப்பிடுவதே மேலென்றிருந்தது இளமையிலே. இந்த லட்சணத்தில் அவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதும் திருத்துவதும்எப்படி?

நம்முடைய பலவீனம் குழந்தைகளுக்குத் தெரியக்கூடாதென்று ஒரு கௌரவம். இவைகளையும் மீறி என்றைக்காவது ஒருநாள் எக்கச் சக்கமாய், ஒன்பது, பதிமூன்று முதலிய வாய்ப்பாடுகளைக் கேட்கவேண்டி நேர்ந்துவிடுகிறது. நாம் மெதுவாய் அப்பாவையோ அண்ணாவையோ கேட்கவைக்கிறோம். அவர்கள் நம்மைவிட அசகாய சூரர்கள். தங்களுக்கே மறந்துபோய்விட்டதென்பதை வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டு விடுவார்கள். இது நம்மில் பெரும்பான்மையோருடைய அனுபவம்.

மற்றபடி, இலக்கியமோ, கலைகளோ, எல்லாவற்றிலும் முன் அணியிலே நிற்பாள் கமலா, ஆனால், பீஜகணிதம், க்ஷேத்ரகணிதம் என்றால் போதும்! அவ்வளவுதான்!

விஷயம் இந்த அளவிலே நின்றுவிடுகிறதா? அதுதானில்லை. அன்புள்ள ஒரு தோழி, துணிக்கடைக்கும் பாத்திரக்கடைக்கும் நம்மைத் துணைகோருகிறாள். அவளால் மனதில் கணக்கு வைத்துக்கொள்ள முடியாது. நிதானமாய்ப் பலகையில்போடவேணும். அதுவும் நாலுபேருக்கு நடுவிலே ஓடவே ஓடாது. ஒரே படபடப்பு. ஆகவே பிறர் துணையினால் கடையில் வியாபாரம் சௌகரியமாய் முடியும் என்பது அவள் எண்ணம்.

கடைநடுவிலே கொண்டுபோய் நிறுத்திவிட்டு, கஜம் ரூ. 3-3-3 வீதம் அரையே அரைக்காலே வீசம் கஜம் என்ன விலை? இதேபோல இன்னும் பலவிதமான விலைகள் ஒன்றிலே காலேவீசம் கஜம், காலருக்குமட்டும் போதும் என்பாள். இன்னொன்றிலே, அரையே மாகாணி கஜம், கையில்லாத சட்டை....இப்படி துணிகளைக் கிழிப்பதற்குமுன்னே நாம் பில் தயாரிக்கவேணும்......கடையிலிருந்து வெளியே வந்தால் போதும் என்றாய்விடும்.

வீட்டு வரவுசெலவு, ஏதாவது பொது விஷயங்கள் அதன் வரவு செலவு, இவைகள் வேறு. எப்படி நூற்று நூற்றுக் கணக்குப் பார்த்து எழுதினாலும், ஏதாவது குறைந்து கையிலிருந்து ஈடுகட்டவேண்டி நேரும், நாமும் வெகு சாமர்த்தியமாய் பைசாக்களை பதினால் வகுத்து, அணுக்களை பன்னிரண்டால் வகுத்து அதிகலாபம் கணக்கிடுவோம். இவ்வளவு கஷ்டங்களும் பெரியவர்களுக்குப் புரிகிறதா? அதுதான் இல்லை. "என்ன கணக்கோ! ஓயாமல் ஒழியாமல், சித்ரபுத்ரன் கணக்கு" என்ற பரிகாசம். வெறும் கூட்டல் கழித்தலுக்கே இந்த வைபவமானால், மற்றபடி கணித சாஸ்திரத்தைப்பற்றிக் கேட்பானேன் என்று தோன்றுகிறதல்லவா? இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது பெண்கள் கணித சாஸ்திரத்திலே திறமையுள்ளவர்களாக இருக்கமுடியுமா? இருந்திருக்கத்தான் முடியுமா? என்று சந்தேகப்படுகிறோம்.

ஆனால் இவற்றிற்கெல்லாம் நேர்மாறாகப் பண்டைகாலப்பெண்மணிகளுள் பலர், கணிதசாஸ்திரத்திலும், வானசாஸ்திரத்திலும்கூட நிபுணர்

களாக இருந்திருக்கிறார்கள். சாமான்யகணிதம் மட்டுமல்ல. பீஜகணிதம், க்ஷேத்ரகணிதம், த்ரிகோணகணிதம், பீஜகணிதத்தில், Diaphanline Equations, இவை சம்பந்தமான தொடர்பின்னங்கள். Indeterminate Equations க்ஷேத்திரகணிதம், திரிகோணகணிதம் இவைகளில் Pythagoras Theorem, உயரமும், தூரமும் ஆகிய இவைகள் லீலாவதி என்னும் நூலில் இருக்கின்றன. பீஜகணிதம், த்ரிகோணகணிதம், க்ஷேத்ரகணிதம், இவைகளிலெல்லாவற்றிலுமே மிகுந்த மேதாவிகளாயிருந்திருக்கிறார்கள் என்பதற்கு லீலாவதியே போதுமான உதாரணம்.

* * * *

அழகிய சின்னஞ்சிறுவீடு. கோலாகலமான சிரிப்பின் ஒலி. பெண்கள் ஒருவருக்கொருவர், "என்னகுழந்தை? ஆணா? பெண்ணா?" என்ற கேள்வி ஒருபுறம். "குழந்தை வெகு அழகாயிருக்கிறது. தங்கவிக்ரகம் போல," என்றாள் இன்னொருத்தி. "உஸ்! சும்மாயிரடீ, இப்பொழுது என்னதெரியும்? மூன்று முப்பது முடிந்தால்தான் சாயல்தெரியும்," என்று சொன்னாள் இன்னொருத்தி. தாயின்முகமும் அகமும் ஆனந்த மிகுதியினால் மலர்ச்சிகிறது. அந்த வேதனையையும்மீறி முகத்திலே வெட்கத்தோடுகூடிய புன்சிரிப்பு. இதற்குள் குழந்தை 'குவா! குவா!' என்று அழுகைச்சத்தம். வீதிப்புறம் ஓடினாள் இன்னொருத்தி.

தந்தை சுவடியும் கையுமாக தெருத்திண்ணையிலே உட்கார்ந்திருந்தார். வந்தவள் "பெண்குழந்தை அண்ணா!" என்றாள்.

"சரிதான், அழும்குரல் கேட்குமுன்பே, நேரத்தைக்குறித்து விட்டேன். ஸ்திரீவேளைதான், அப்பொழுதே தெரிந்துவிட்டது" என்றார்.

"என்ன அண்ணா! மருமகள் பிறந்தால் கற்கண்டு கொடுக்க வேண்டாமா?"

"நானாகொடுப்பது? நீதான் எனக்கும் கொடுத்து மற்றவர்களுக்கும் கொடுக்கவேணும்." என்றார். இந்த வார்த்தைகள் வாயினின்றும் எழுந்தனவே யன்றி அவர் மனம் எங்கேயோ சுழன்றுகொண்டிருந்தது. அவள் மற்ற வேலைகளைக்கவனிக்க உள்ளே ஓடினாள். ஆனால், "தமையனார் முகத்திலே தான் எதிர்பார்த்த அளவு உற்சாகத்தைக் காணோமே? ஏன்?" என்று சிந்தித்தது அவள் பேதை நெஞ்சம்; பிறகு தமையனைக் கேட்க வேணுமென்று நினைத்தாள். ஆனால் புத்ரோத்ஸவ வைபவத்தில் இந்த விஷயம் மறந்தேபோய்விட்டது.

* * * *

நாட்கள் கடந்தன. மாதங்கள் மறைந்தன; வருஷங்கள் பல சென்றன. குழந்தை லீலாவதி இன்று இளமை என்னும் பூஞ்சோலையில் அடி எடுத்து வைத்திருந்தாள். தந்தையின் குருகுலத்தில் பயிலும் மாணவர்களுள், அழகிய ஒரு இளைஞனை நாடியது அவள் உள்ளம். அவனும் குருவின் புதல்வியான இந்த அழகி, தனக்குக்கிட்டாத கொம்புத்தேன் என்றே நினைத்திருந்தான்.

ஒருநாள் காலை, கைநிறையத் தாமரைக்கொத்தும், இடுப்பிலே குடமுமாய், ஈரவஸ்திரத்துடன் வந்துகொண்டிருந்தாள் அவள், சுருண்ட குழல்கள் காற்றிலே பறக்க அசைந்து, அசைந்து அவள் நடந்துவரும் அந்த அழகைக்கண்டவுடன் தந்தையின் முகத்திலே, சோகத்தின் சாயை படிந்தது. இருந்தாலும், வெளியில் காண்பித்துக்கொள்ளாமல் எதையோ ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். மாணவர்கூட்டம் திண்ணையில் அவருக்கு எதிரில் வரிசையாய் உட்கார்ந்து, ஏதோ ஒரு கணிதத்தின் விடையைக் கண்டுபிடிக்க முயன்றுகொண்டிருந்தது. குடத்தோடு முதற்

படியிலே கால் வைத்த அவள் சற்றே நின்ருள். "லீலா ! இதோ பார்! இது ஒரு கடினமான கணக்கு. இவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். ஒரு நாழிகையாயிற்று. இன்னும் விடை வரவில்லை. நீ சொல்லு ! பார்க்கலாம். கணக்கைச்சொன்னர். அவள் இன்னெருமுறை சொல்லும்படிகேட்டாள்.

சில விநாடிகள்தான் ஆயின. இடுப்பிலே குடமும், கையிலே தாமரை மலர்க்கொத்துமாய் அந்த ஜலமோகினி "சொல்லட்டுமா?" என்ருள். மாண வர்கள் திகைத்துப்போனர்கள். சரியானவிடை சொல்லிவிட்டாள். ஆனந் தக்கண்ணீர் பெருகத் தந்தை மகளை ஏறிட்டுப் பார்த்தார். பிறகு ஒரு பெரு மூச்சு. வகுப்பு அமைதி இழந்து பேச்சிலே ஆழ்ந்தது. ஆனல், அவன், அந்த இளைஞன், வைத்த கண் வாங்காமல் கண்களையும் அவளோடு போக விட்டுவிட்டானே? என்று நினைப்பவர்போல் "வத்ஸ! எங்கே பார்க்கிருய்?" என்ருர் ஆசிரியர். தன் செயலுக்கு வெட்கினவனுய்த் தலைகுனிந்தான் அவன்.

இதற்குள் 'இந்தக்கணக்கு ஏற்கனவே அவளுக்குத் தெரிந்திருக்கும்' என்ருன் ஒரு சந்தேகப்பிராணி.

"எனக்கே இன்று காலையில்தான் நினைவு வந்தது. முதன் முதலாக உங்களுக்குச் சொன்னேன்" என்று சொல்லியவராய் "அம்மா ! லீலா !" என்று கூப்பிட்டார் அவர்.

"இதோ வந்துவிட்டேன் அப்பா !" என்று சொல்லியவளாய் மறு விநாடி தோன்றினள் அவள்.

"இந்தக் கணக்கு இதற்கு முன்னே தெரியுமா ?

"தெரியாதே ! நான் ஆற்றங்கரைக்குப் போகும்பொழுது, மாதிரி சொல்லி நீங்கள் விவரித்துக்கொண்டிருக்கவில்லையா ! அதை வைத்துக் கொண்டுதான் செய்தேன்" என்ருள் அவள்.

கோடியிலிருந்து இரண்டு கண்கள் ஆனந்தத்துடன் அவளை விழுங்கி விடுவதுபோல் பார்ப்பதை அறிந்து நாணத்தால் முகம் சிவக்கத் தலை குனிந்தாள் அவள்.

* * * *

"அப்பாடா !" என்று சுவடியைக் கீழே போட்டார் அவர். நெடு நாளைய ஆராய்ச்சிக்குப் பிறகு, ஒரு அரிய சந்தர்ப்பம் அவர்க்குக் கிடைத்துவிட்டது. விஷயம் வேறென்றுமில்லை. அவள் பிறந்த வேளை, அவள் இல்வாழ்க்கை இன்பத்தை நெடுநாள் நுகரமாட்டாள், வெகு சீக் கிரத்திலேயே வைதவ்யம் என்னும் கொடுந்துயருக்கு ஆளாய்விடுவாள் என்றிருந்தது. ஆகவே 'கன்னியாகவே இருந்துவிடட்டுமே' என்றுகூட அவர் நினைத்ததுண்டு. ஆனல் 'அந்த மாணவன் எங்கிருந்தோ தோன்றி அவள் நெஞ்சிலே இடம்பெற்றுவிட்டானே!' என்று தவித்திருந்த அவருக்கு ஒரு சிறந்த சந்தர்ப்பம் வாய்த்தது என்ருல் சந்தோஷப்படுவதில் ஆச்சர்ய மென்ன ?

தை மாதம். சூரியன் மகரராசியில் பிரவேசித்த பதினன்காம்நாள். கிரகங்கள் வெகு அழகாய் அமைந்திருந்த ஒரு சுப முகூர்த்தம். பல வருஷங்களுக்கு ஒருமுறைதான் அப்படி அமையும். அந்த ஒரு குறிப் பிட்ட நல்லோரையில் பாணிக்ரகணம் நடைபெறும் பக்ஷத்தில் மற்ற அசுப பலன்கள் எல்லாம் ஓடி ஒளியவேண்டியதுதான். விதியை மதியால் வென்றுவிடலாம் என்று நிச்சயித்துவிட்டார். அவர் மனம் ஆனந்த மிகுதியினல் பூரித்தது. இன்பகரமான விஷயங்கள் நெடுநேரம் நெஞ்சில் நில்லாதல்லவா ? உரத்த குரலில் 'லீலாவதீ !' என்று அழைத்த வண்ணம் உள்ளே நுழைந்தார் அவர்.

அழகிய மணவறை. சீதையும் ராமனும்போல் வீற்றிருந்தார்கள் அந்த தம்பதிகள். இருவரது முகத்திலும் வெற்றியின் பெருமிதமும் ஆனந்தமும் ஒருங்கே தாண்டவமாடிக்கொண்டிருந்தன. வேதியர்களது வேதகோஷம் அந்தப் பந்தல் முழுவதும் நிறைந்திருந்தது. மலர்களின் நறுமணமும், அகிற்புகையும் கலந்து, சுருள் சுருளாய் சுழன்றுகொண்டிருந்தது. விவாகத்திற்குப் பூர்வாங்கமான சடங்குகள் எல்லாம் முடிந்துவிட்டன. ஆனால் குறித்த வேளைக்கு இன்னும் நேரமிருக்கிறது.

வீட்டின் நடுவே பெரியமுற்றம், நாற்புறமும் தாழ்வாரங்கள் அடைத்துக்கூடம். முற்றத்தின்நடுவே ஒரு பெரிய வாயகன்ற பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பப்பெற்றிருந்தது. அந்தப்பாத்திரத்தை ஒருவரும் தொடவோ அசைக்கவோ கூடாதென்று அவர் கட்டளையிட்டிருந்தார். அதன் நடுவே சின்னஞ்சிறு கிண்ணமொன்று மிதந்துகொண்டிருந்தது. அதன் அடியில் கடுகளவேயுள்ள ஒரு சிறு துவாரம், சூரியன் உச்சிக்கு வந்த உடன் அந்தக்கிண்ணத்தை மிதக்கவிடவேணுமென்றும் அடியிலுள்ள துவாரத்தின்வழியாக தண்ணீர் கொஞ்சங்கொஞ்சமாக நிறைந்து, நிறைந்து வந்தவுடன் 'பாணிக்ரகணம்' நடைபெறவேண்டுமென்றும் குறித்திருந்தார் அவர்.

உறவினர்களும் விருந்தினர்களும் இந்த அதிசயமான சம்பவத்தைக் காணும்பொருட்டு நாற்புறமும் உட்கார்ந்திருந்தனர், பட்டம், சுட்டி, நத்து, புல்லாக்கு, இவைகள் அசைய அசையத் தன் தோழிகளுடன் பேசிக்கொண்டிருந்தாள் மணமகள். சற்றுநேரத்திற்கொருமுறை தண்ணீர் எதுவரையில் நிரம்பியிருக்கிறது என்று பார்க்கவிரும்பியது அவள் மனம். பிறர் கவனித்தால் பரிகசிப்பார்களோ ! என்ற நாணம் ஒருபுறம், மெள்ள, மெள்ள, ஒருவரும் கவனிக்காமலிருக்கும்பொழுது தலையைநீட்டி அந்தக் கிண்ணத்தை எட்டிப்பார்த்தாள் அவள்.

* * * *

ஆயிற்று. நேரமாயிற்று. சூரியனும் தாழ்ந்துவிட்டான். இன்னும் கிண்ணம் நிரம்பவில்லையே என்று எட்டிப்பார்த்தார் தந்தை. அவருக்கு 'துணுக்'கென்றது. என்ன ஆச்சர்யம்! அவள் அணிந்திருந்த சுட்டியிலிருந்த ஒரு சிறு முத்து அந்த துவாரத்தை அடைத்துவிட்டது. அப்படியே திகைத்துப்போனார் ஒருகணம். "அடாடா ! மனிதனது புத்தி சாதுர்யத்தினால் மட்டும் வெற்றிபெறுவது என்பதுமுடியாத காரியம். குறித்த நேரங்கடந்து அடுத்த லக்னமல்லவா வந்துவிட்டது! இனி இந்த விவாகத்தை நடத்துவதா? நிறுத்துவதா ? என்ற ஒரு பெரும் போராட்டம் அவர் மனத்துள். சில வினாடிகளுக்குள் நூற்றுக்கணக்கான எண்ணங்கள் மின்னொளிபோல் தோன்றித் தோன்றி மறைந்தன. கடைசியில் "தெய்வம் விட்டபடி" என்று துணிந்துவிட்டார்.

* * * *

அவனும் அவளும் இன்பகரமான வாழ்க்கை நடத்தினார்கள். ஒரே ஆனந்தவாரிதியில் மூழ்கித் திளைந்தார்கள். வெகு சீக்கிரத்திலேயே "கைம்மை" என்கிற பெரிய பேரிடி அவள் தலையிலே வீழ்ந்தது. கல்வியறிவிலே சிறந்த அப்பெண்ணரசி, தன் எஞ்சியுள்ள வாழ்நாளை, கணிதத்திற்கே அர்ப்பணம் செய்துவிட்டாள். வயது முதிர்ந்த தன் தந்தையோடு ஒத்துழைத்துப் பல அரிய நூல்களை எழுதுவதற்குக் காரணமாயிருந்தாள். ஆகவே, தந்தை அவள் பெயரையே கணித நூலுக்கு இட்டாரென்பது கர்ண பரம்பரை.

உலகம் பலவிதம். அதன்போக்கே ஓர் அலாதியானது. புதுமை என்று வியப்புறுவதற்குள் பழமையாகிப் புளித்துவிடுகிறது. சிலசமயம் புளிப்பதற்குப் பதிலாகப் பல ரூபங்களில் திரிந்துபோய் விஷத்திற்கொப்ப பரவியும்விடுகிறது. இந்த சம்பவத்திற்கு நல்லது தீயது என்கிற பேதா பேதமே இருப்பதில்லை. நல்லதையும் நாசம் செய்துவிடும். நல்லது அல்ல தையும் மகா ச்ரேஷ்டமாக்கிவிடும். இதுதான் காலத்தின் கூத்து.

பரதேசிக்குழந்தையான நிருபமாவின் பரிசுத்தமான வாழ்க்கையின் ரகஸியத்தை பகவானும் அவரை நம்பிய காந்தாமணியுந்தான் இதுகாறும் அறிந்திருந்தார்கள். இன்று உலகமறியச் செய்துவிட்டதானது பலபேர் களின் வாயில் பலவிதமாகப் பிதற்றவும், ஒருசிலர்மட்டும் போற்றவும் இடம் உண்டாக்கியது.

தாசிவர்க்கத்தைச் சேர்ந்த பொறாமைப்பேய் பிடித்த ஒவ்வொருவரும் 'நிருபமா காந்தாமணியின் சொந்தபெண்தான்; வேண்டுமென்று இத்தகைய கட்டுக்கதையைக்கூறி உலகையே ஏமாற்றுகிறுர்கள்' என்றும் "புண்ணியமூர்த்தியின் மகள்தானே!" என்றும் வாய் கூசாது சிறிதும் யோசனையின்றி அபாரமான அபாண்டத்தைக்கூறி உளறவாரம் பித்தார்கள்.

உயர்குலத்தில் பிறந்த அறிவாளிகள் என்று பெயர் உள்ளவர்களே தாறுமாருகப் பிதற்றும்போது கேவலம் அற்பத்திலும் அற்பகுணத்தையே பூஷணமாகக்கொண்டுள்ள சில தாசிகளின் குரைப்பைக்கூறவேண்டுமா!

நோயாளி கத்துவதையெல்லாம் டாக்டர் கவனித்தால் சிகிச்சைநடத்த முடியுமா! தனது லக்ஷியத்தை செவ்வனே செய்துவந்தால் நோயாளியின் அழுகையே சிரிப்பாக மாறிவிடுகிறது. பிறகு டாக்டரின் கைராசி, அப்படி இப்படி என்று புகழ்மாலைகளைச் சூட்டுவார்கள். இதுதான் உலக நாடகத் தில் நடக்கும் காக்ஷிகள்.

அதேபோலத்தான் புண்ணியமூர்த்தி இந்த வசை பாணங்களை வரவு செலவிலேயே வைக்கவில்லை. தனது பரிசுத்தத்தை பகவான் அறிந்து அவன் உள்ளம் குளிர்ந்தால் போதும். எந்த நல்ல காரியம் செய்யப் புகுந் தாலும் அக்காரியத்திற்கு விக்கினமும் காரியகர்த்தர்களுக்கு அபவாதமோ, தீராப்பழியோ, சகிக்கமுடியாத துன்பத்தை விளைவித்து நாசஞ்செய் வதோ! முதலியன எந்த யுகதர்மத்திலும் நிறைந்திருப்பதை பலபுத்தகங் களில் காணும்போது இக்கலியில் இதொரு அதிசயமா! என்றே அந்த சுத்தாத்மா எண்ணிஞராதலால் அவைகளைப்பற்றி எள்ளளவும் மனத்தாங் கலோ, விசனமோ அடையாமல் காரியத்தில் கண்ணுய் லக்ஷ்யமே ப்ரதானமாகக் கொண்டார்.

காந்தாமணியின் மறைவுக்கு முன்பே பத்திரிகையில் இந்த விஷயம் வெளியாகிவிட்டதால் ஊரே குசமசவென்று ஆச்சரியக் கடலாடியது. சிலர் நம்பினூர்கள். ஜனங்களின் வாய்க்குப் பூட்டா, சாவியா! வ்யவஸ்தையா; வ்யவகாரமா!...'ஓகோ! வெகு நாட்களாக உள்ள சம் மந்தத்தினுல்தான் மகளையே வைத்து நாட்டியமாடச்செய்து ஆயிரக்கணக் கான ரூபாயைக் கொடுத்து ஆபத்து சகாயநிதிக்கு உதவி, பெரும் புகழ் மாலையைத் தானும் சூடி மகளுக்கும் "நாட்டிய கலாசுந்தரி" என்கிற பட்டத்தையும் வழங்கச் செய்தாராக்கும். சாதாரண வெறும் தேவடியாள் பெண்ணுயிருந்தால் இப்படிகூடத் தன் மகளை அனுப்பி உதவி புரிந்திருப் பாரா! இத்தகைய ரகஸ்யமிருப்பதனுல்தான் சகோதரிக்குத் துணையாக அண்ணனையே அனுப்பினுர்...

என்றெல்லாம் பெரிய பெரிய புகாரைக் கிளப்பி விட்டார்கள். சில அவசரக்குடுக்கைகள் புண்ணியமூர்த்தியை நேரிலேயே கேட்கவும் கூசாமல் கிளம்பினார்கள். மகாத்யாகியாகிய அவர் இத்தகைய ப்ரக்ருதிகளின் வார்த்தைக்கு ஒரே யடியாக, "ஆம்...என்னிஷ்டம். நான் எப்படி வேண்டுமாயினும் இருப்பேன்; உங்கள்வரையில் நீங்கள் செவ்வையாக நடந்தால் போதும்" என்று கூறிவிட்டார்.

நிருபமா வீட்டிற்குவந்து மணி ஒன்றிரண்டு ஆவதற்குள் வம்பும் தும்பும் ஊர் ஊராகப் பரவிவிட்டன. 'புண்யமூர்த்தி தாசிப் பெண்ணை வீட்டில் கொண்டுவைத்துக் கொண்டுவிட்டாராமே' என்று பேச்சுக்கள் பறந்தன...

ஆக்ரோஷத்துடன் காரி உமிழ்ந்த சுகுமாரனைக் கண்டதும் சிவகுமாரனுக்கு தேகமே பத்தி எரிந்தது. அவனால் ஆத்திரத்தை அடக்கவே முடியவில்லை. கையிலிருந்த பாலை பரபரப்புடன் கீழே வைத்துவிட்டு வெகு பதைபதைக்க எழுந்தான்.

நிருபமா ஏற்கெனவே இருந்த அதிர்ச்சியுடன் இந்த எரிமலைபோன்ற வார்த்தையும் செய்கையும் கண்டு கதிகலங்கிப்போய் அப்படியே அலறியவாறு கூவெனக் கத்திவிட்டாள். அடுத்த நிமிடமே சற்று சமாளித்தவளாய் தடாரென்று கீழே இறங்கி சுகுமாரன் எதிரில் ஓடி அவன் காலில் விழுந்து..."நான் தாசியில்லை...நான் வேசியில்லை. தங்களைப்போன்ற உயர்குலத்தில் பிறந்தவள்தான். அனியாயமாய்ப் பேசி மனத்தைப் புண்ணாக்காதீர்கள்"...என்று தன்னை யறியாத பரிதாபத்துடன் கதறினாள்.

மகா மூர்க்க குணமும் கர்வமும் கொண்டுள்ள சுகுமாரன் "சீச்சீ... அல்பப் பிசாசே!...கற்பை விலைக்கு விற்கும் நாய் ஜென்மங்கொண்ட நீயா என்னிடம் பேசிப் பசப்பவருகிறாய். தாசீ! என்று உயர்ந்த பதத்தில் வேறு சொல்லவேண்டுமா? தேவடியாள் சிறுக்கி...கூத்தாடிக் கழுதை" என்று நாக்கில் நரம்பில்லாது திட்டும்போது சிவகுமாரனால் அதற்குமேல் ஆத்திரம் எல்லை கடந்துவிட்டதால் கையை ஓங்கிவிட்டான். நர்ஸ் நிருபமாவைத் தூக்கிக்கொண்டு விலகினாள்.

சுகுமாரன் பின்னாலேயே கூப்பிட்டுக்கொண்டுவந்த கீர்வாணி இன்னது செய்வது என்பதை யறியாது துடித்தவாறு, "சிவா! சிவா!... நில்லு...நில்லு!"...என்று கர்ஜனை செய்தாள். அதே சமயம் ஆஸ்பத்திரியிலிருந்துவந்த புண்ணியமூர்த்தி வெகு நிதானமாகவே இந்த சம்பவங்களைப் பார்த்துக்கொண்டே உள்ளேவந்து "சிவகுமார்! ஏதேது! நீகூட அவனை விஞ்சிவிடுவாய்போலிருக்கிறதே பொறு! பொறு! ஆத்திரத்தையடைந்து சாந்தத்தை இழந்தவன் கேவலம் மிருகத்திற்குக்கூடக் கடையனாகவன்றோ ஆய்விடுவான்! உனக்கேன் இத்தகைய ஆத்திரம்? உனக்கு எந்த காப்ட்டன் மாமனாரும், பேஷன் பதுமையான காதலியும் வரப் போகிறார்கள்? பேசாதிரு...சுகுமார்! உன் கைவரிசைகள் இம்மட்டுடன் நிற்கட்டும். அதிக ப்ரவர்த்தகத்தில் போய்விடவேண்டாம்....கீர்வாணி! போ உள்ளே...உம்...இறங்கிப்போ"...என்று ஒரு கடுமையான பார்வை பார்த்து, அவளை விழித்தவாறே நிருபமாவை சேர்த்தணைத்துக்கொண்டு சமாதானம் செய்தவாறு உள்ளே போய்விட்டார்.

சிவகுமாரன் மறுபேச்சின்றி தலைகுனிந்தவாறு தகப்பனாரைப் பின் தொடர்ந்தான். சுகுமாரன் ப்ரமாதமான ஆத்திரத்துடன் ஓடிவந்துவிட்டானேயன்றி தகப்பனாரை நேரில் பார்த்ததும் அவனையறியாத நடுக்கமும் ஒருவிதமான அச்சமும் ஒரு சிறிது உண்டாகியது. சிவகுமாரனையும்

நிருபமாவையும் வெகு கடுமையான பார்வையால் அப்படியே எரித்து விடுவன்போல் பார்த்தபடியே வெளியே சென்ருன்.

கணவனின் சொல்லும் பார்வையும் கீர்வாணியின் ஆசாபாசத்தையும் அடக்கியதுபோல் நடுக்கலுறச்செய்ததால் உடனே மறுபேச்சின்றி தடதடவென்று கீழேபோய்விட்டாள். மறைவிடத்தில்தான் தாயும் மகனும் கொட்டியளந்து குசுமுசுவென்று பேசி பலத்த வாதம் செய்கிருர்களே யன்றி அந்த த்யாகச்சுடரின் முகத்தைப்பார்த்ததும் அவர்களின் தைரியம் ஒரு பெட்டிப்பாம்புபோலத்தான் அடங்கிவிடுகின்றது. என்ன செய்வது?...

கீழே இறங்கிவந்த சுகுமாரன் கூண்டிலடைபட்ட சிங்கம்போல் கைகளைப் பின்கட்டும் முன்கட்டுமாகக் கட்டிக்கொண்டு இக்கோடிக்கும் அக்கோடிக்கும் உலாவுகிருன். முகத்தைச் சுளித்துப் பல்லை நரநரவென்று கடித்துக் குமுறுகிருன். கீர்வாணியோ தடதடவென்று தன் தனியறைக்கு வந்து சாக்ஷாத் கைகேயியைப்போல் படுத்துவிட்டாள்.

கொலை, களவு, சூது முதலிய பயங்கரமான செய்கைகளைக்கண்டு எத்தகைய பயமும் அச்சமும் அடைவார்களோ, அதைவிட அதிகமான அதிர்ச்சியே ஸ்ரீமதி கீர்வாணிதேவியும் சுகுமாரனும் அடைந்து ஆத்திரத் தாண்டவத்தின் மிகுதியால் அவ்விருவரும்கூடச் சற்றுநேரம் பேசாமல் மவுனம் சாதித்தார்கள்.

சிறிதுநேரங்கழித்து சுகுமாரன் தாயாரிடம் பரபரப்பாக ஓடிவந்தான். "அம்மா! இந்த அவமானத்தை என்ஞல் பொறுக்கவே முடியவில்லை. அப்பாவின் ஆப்தசிநேகிதரான கங்காராமிடம் நான் நேரிலேயே போய் இந்த அவமானக்கொள்ளையை எடுத்துக்கூறி பஜீத்செய்துவிடுகிறேன். என் மனம் பொறுக்கவே இல்லை." என்று துள்ளினுன்.

அவ்வளவுதூரம் அதீதவழியில் செல்ல கீர்வாணியம்மாளின் மனது துணியவில்லை. "என்னவிருப்பினும் நம் கணவனின் கண்ணியத்திற்கு பங்கத்தை நாமே விளைவிப்பதா!" என்றுதான் எண்ணி மகனை இழுத்து நிற்கவைத்து "சுகுமார்! ஆத்திரப்பட்டு நீ இம்மாதிரி எல்லாம் செய்துவிடாதே. சற்றுபொறு. உன் முரட்டுத்தனத்தைவிட உன் பிதாவுக்கு முரட்டுத்தனம் வந்துவிட்டால் இலேசில் நீங்காது. அவரது சாந்தமும் பொறுமையும் எத்தனை ஆழமாக இருக்கிறதோ அத்தனைக்கத்தனை கோபமும் வைரமாகப்பதிந்துவிடும். அதை நான் பலமுறைகளில் பார்த்திருக்கிறேன். ஆகையால் அவசரப்பட்டு எதுவும் வாயைவிட்டு ஆத்திரத்தைக் கொட்டிவிடாதே." என்று சமாதானப்படுத்தினுள்.

ஆனல் சுகுமாரனின் மனம் அச்சமாதானத்திலை் சாந்தமடையவே இல்லை. உடல் துடிக்கிறது. 'தேவடியாள் சிறுக்கிக்கு இத்தனை சப்பைக் கட்டா! கூத்தாடிச்சிறுக்கிக்கு இத்தனை பரிசலும் பேத்தலுமா!' என்கிற பதங்களே அவன்வாயிலிருந்து கூத்தாடுகின்றன. அச்சமயம் இவர்களுக்கு மிகவும் பழக்கமான பெரியவர் ஒருவர் தம் வீட்டிற்கு டாக்டரை அவசரமாக அழைத்துச்செல்வதற்காக காருடன் வந்தார். அவரிடம் எல்லோருமே நெருங்கிப்பேசும் பழக்கமுடையவர்களாதலால் அவர் சுகுமாரனை நோக்கி, "அப்பா இருக்கிருரா? ஆஸ்பத்திரியில் காணவில்லை. சமதிக்கு உடம்பு சரியில்லை. உடனே வரும்படி டெலிபோன் செய்தேன். 'அவரில்லை. வந்தால் சொல்கிறேன்'' என்று சிவகுமார் சொன்னுன். ஆனல் இத்தனை நேரமாகியும் இன்னும் வராததால் நானே நேரில் வந்தேன். இருக்கிருரா? தேவடியாளின் சவச்சடங்குகள்தான் முடிந்தாய் விட்டதே!... என்று ஒரு மாதிரியான இளப்பம் த்வனிக்கும்குரலில்கூறினுர்.

இதய ஒலி

இதையே ஒரு ஆதாரமாகக்கொண்டு சுகுமாரன் மெஷின் முடுக்கிவிட்டதுபோல் ஆடக் கிளம்பிவிட்டான். "சார்! ஒன்றுமே கேட்காதீர்கள். நான் வயதில் சிறியவன்தான். இருப்பினும் என்னால் இந்த இழிவையும் அவமானத்தையும் தாளவே முடியவில்லை. 'தேவடியாள் துலைந்தாள். அதோடு பிடித்த பிசாசும் துலைந்தது.' என்று நாங்களும் எண்ணி ஏமாந்தோம். அவமானம் மட்டுமின்றி அழியாத இழிவும் உண்டாகிவிடும்படியான நிலைமை தான் புதிதாக ஏற்பட்டுவிட்டது. வெட்கக்கேட்டை சொல்ல துக்கமும் ஆத்திரமும்தான் வருகிறது. அந்த தேவடியாள் குட்டியைத் தாமே தமது பெண்ணாக வளர்ப்பதாய் வாக்கும் கொடுத்துவிட்டு அழைத்துவந்து மாடியில் வைத்துக் குலாவுகிற வயிற்றெரிச்சலை போய்ப் பாருங்கள். சிவகுமாரன் அந்தக் கூத்தாடிச்சிறுக்கியின் மோகத்தில் தோய்ந்துவிட்டதுபோல் அவளடியிலேயே கிடக்கிறான்." என்று படபடத்துக்கூறினான்.

வந்த மனிதர் செல்வவந்தர் என்றாலும் செல்வத்திற்கேற்ற மரியாதையும் கண்ணியமும் இல்லாது வம்பிலும் தும்பிலும் அதிக நாட்டங்கொண்டவராதலால், "என்ன! இப்படியா அக்ரமம் நடக்கிறது!" என்று அரைகுறையாய் கூறியவாறு 'இம்மட்டுமாவது இடம் கிடைத்ததே' என்று மாடிக்குத் தட்தடவென்று ஓடினார்.

'நன்றாகப் போய் பார்க்கட்டும், மானம் போகட்டும்.' என்று உள்ளூர சுகுமாரன் நினைத்தான். ஆனால் கீர்வாணிக்குமட்டும் மனத்தில் திக்கு திக்கென்று அடித்துக்கொண்டது. 'சுகுமார்! நமது மானத்தை நாமே போக்கிக் கொள்வது நியாயமில்லை. அப்பாவுக்குக் கோபம் வந்துவிடுமோ என்னவோ! நீ அவரைக் கூப்பிடேன். போகவேண்டாமென்று சொல்லேன்.' என்று சற்றுப் பயத்துடன் பதறினாள்.

சுகுமாரனா கூப்பிடுகிறவன்! பேசாது நின்றிருந்தான். மாடிக்குச் சென்ற மனிதர் உண்மையில் இந்த ரகஸியத்தைப் பார்க்கத்தான் டாக்டரைக் கூப்பிடும் சாக்கை வைத்துக்கொண்டு வந்தார் பாவம். வந்த காரியம் வெகு சுலபமாகப் பூர்த்தியாகிவிட்டதைக் கண்டு சந்தோஷத்துடன் மாடிக்குப் போனார்.

நிருபமா படுத்திருந்தாள். புண்யமூர்த்தி தூர உட்கார்ந்திருந்து தினசரி படித்துக்கொண்டிருந்தார். சிவகுமார் தன்னறையிலிருந்ததால் அங்கு காணப்படவில்லை. வந்த மனிதர் தான் ஒன்றுமே அறியாதவர்போல் "டாக்டர்! வேலையாயிருக்கிறீர்களா!...யாரது...காப்டன் காந்தன் வந்துவிட்டாரா என்ன...அவர் மகள் லலிதகுமாரியா!"...என்று புதிதாக பார்ப்பவர்போல் இழுத்தார்.

யார் யாருடைய குணம் எத்தகையது, யார் யார் மனப்போக்கு எம்மாதிரியானது என்பதை வெகு சூக்ஷ்மமாக அறிந்துகொண்டுள்ள புண்யமூர்த்தி இம் மனிதனின் கள்ள புத்தியை மட்டும் அறியாதுபோவாரா! அல்லது அறிந்து பயந்து நடுங்கி மறைக்கும் பேர்வழியா! அவர் வெகு கம்பீரமான த்வனியுடன், "வாருங்கள். உட்காருங்கள். இவள் காப்டனின் மகளல்ல. ஒரு சாதாரண மனிதனின் மகள்தான். தனது பரிபூர்ண திறமையினால் அற்புதமாக நாட்டியம் செய்து 50 ஆயிரம் ரூபாய் ஆபத் சகாயநிதிக்குக் கொடுத்த சிறுமிதான் இவள்...

என்று முடிப்பதற்குள் "ஓ! தாசி காந்தாமணியின் குமாரத்தி நிருபமாவா...ஐயோ பாவம்! அவள்தான் இறந்துவிட்டாளாமே!"...என்று துக்கம் விசாரித்தார்.

புண்:—ஓ! நீங்கள் விஷயமே அறியாது பேசுகிறீர்கள்போல் இருக்கிறது. இவள் காந்தாமணியின் வளர்ப்புப்பெண்தான். சொந்த மகளல்ல. இதுவிஷயம் பல பத்திரிகைகளில் வந்ததே, இன்னுமா பார்க்கவில்லை... சரி...எங்கே வந்தீர்கள்? என்ன சமாச்சாரம்?...

வந்:—டாக்டரைத் தேடிக்கொண்டு எதற்கு வருவார்கள்? சுமதிக்கு ஜுரம். அதற்காகத்தான் வந்தேன்...அது கிடக்கட்டும். தங்களுடைய யோக்யதைக்கும்......

என்று ஏதோ மேலே பேச வாயெடுத்தவுடனே புண்ணியமூர்த்தி சற்று கடுமையான தொனியில்,...“சார்! எனக்கு உபதேசம் செய்வதற்கு பரமாசாரியன் வேறு இருக்கிறார். அந்த கஷ்டம் தமக்கு வேண்டாம். முதலில் நீர் சரியாக நடக்கிறீர்களா என்பதை முதலில் பார்த்துக்கொண்டு பிறகு எனக்கு உபதேசம் செய்ய வாரும்.

வானரக்கூட்டமாகிய வாலி சுக்கிரீவனின் கதையைப் படிக்கிறோமேயன்றி பார்க்கவில்லை. அதற்கு ப்ரத்யக்ஷம் இளம் வயதில் இறந்துவிட்ட உமது சகோதரனின் மனைவியை நீர் நடத்திக்காட்டி வருவதைப் பார்த்து உலகமே வியப்புக் கடலாடுகிறது. இந்த அழகுக்கு ஒரு பரதேசிப்பெண்ணுக்கு ஆதரவு கொடுப்பதை நீர் கண்டிக்கவா வந்திருக்கிறீர்?..சரி...சரி.. ரொம்ப சந்தோஷம். போய்வாரும்”...என்று கண்டிப்பாக அவர் கூறி முடிப்பதற்குள்ளேயே இவர் தடதடதடவென்று மாடிப்படி இறங்கிக்கொண்டிருந்தார்... அங்கு மௌனமாக உட்கார்ந்திருந்த நர்ஸ் இந்த காக்ஷியைக் கண்டு கடகடவென்று நகைத்த ஒலி அந்த அப்பாவி மனிதனின் காதில் விழாமலா இருந்தது! விழத்தான் விழுந்தது. முகத்தில் அசடுதட்ட தடதடவென்று நடையும் பலத்தது.

மேலேயிருந்து வரும் மனிதர் ஏதோ ப்ரமாதமான தீர்ப்புச் செய்தியைக் கொண்டுவரப்போகிறார் என்றுதாயும் மகனும் ஆவலுடன் எதிர்பார்த்ததற்கு மாறாக அவர் ஒன்றுமே பேசாமல் நேரில்போய் காரில் ஏறிக்கொண்டு கம்பி நீட்டியதைக் கண்டு வியப்பும் திகைப்புமடைந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். இருவர் முகத்திலும் ஏமாற்றந்தான் ஜ்வலித்தது.

# 11

மனிதர்கள் தம்தம் கடமையில் தவறினாலும் தவருவிட்டாலும் இயற்கை தேவிமட்டும் தனது கடமையில் ஒரு இம்மியளவும் பிசகாது நடந்துவருகிறுப்போல் மனிதர்களால் செய்யப்பட்ட கடியாரமும் தனதுகடமையைத் தவறாது செய்துவருகிறதை மணி டாங்டாங்கென்று பத்தடித்துக் காட்டிய பிறகுதான் கீர்வாணியின் மனது திடுக்கிட்டது.

சமையல்காரன் பலதரம் சாப்பாட்டிற்கு அழைத்தும் சுகுமாரன் வரவில்லை. கீர்வாணியும் கவனிக்கவில்லை. உடனே திடுக்கிட்டவளாய் தடதடவென்று எழுந்து உள்ளே சென்றாள். சாப்பாடு ஒருபுறம் ஆறி அவலாகிறது. சமையல்காரன் அடுக்குள்ளே ஒரு மூலையில் முடங்கிக்கிடந்தான்.

தடதடவென்று மாடிக்கு ஓடினாள். வழக்கத்திற்கு விரோதமாக டாக்டர்மட்டும் தனது படுக்கையில் படுத்திருந்தார். விளக்கில்லை. நிருபமாவும் நர்ஸும் படுத்திருந்ததுதான் தெரிந்தது. தூங்குகிறாளா! விழித்திருக்கிறாளா என்று தெரியவில்லை. முணுக்கு முணுக்கு என்று விளக்கு எரிந்து கொண்டிருந்தது...சிவகுமாரன், கையில் பிடித்த புத்தகத்துடன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான்; விளக்கு பெரிதாக ப்ரகாசித்தது.

என்னதான் கோபமிருந்தபோதிலும் தாயுள்ளத்தின் தன்மையை மாற்றிவிட முடியுமா! ‘குழந்தை சாப்பிட்டானே இல்லையோ தெரிய

வில்லையே! அவரும் ஒரு நாளும் இத்தனை சடுதியில் படுக்கவே மாட்டாரே! சாப்பிட்டாரோ! இல்லையோ! நாம் இப்படி கவனியாமலிருந்தது சுத்த மோசமல்லவா!' என்று அவள் மனமே குத்திக்காட்டியது.

சுகுமாரன் ரூமுக்குச்சென்றான். அவன் லலிதகுமாரிக்காக ஒழித்திருந்த விடுதியை அலங்கரிப்பதிலீடுபட்டிருந்தான். சமயல் உள்ளே போய் பார்த்தாள். செய்த சமயல் அப்படியே ஒரு பருக்கை கூட குறையாதிருந்ததைக்கண்டு வருத்தப்பட்டவாறு சமயல்காரனை எழுப்பினாள்.

அலறி எழுந்த சமயல்காரன் 'இதோ இலை போட்டுவிட்டேன்' என்றான். 'இலைபோடுவதிருக்கட்டும். யார் யார் சாப்பிட்டார்கள். யார் யார் இன்னும் சாப்பிடவில்லை?' என்றாள். 'செய்த சமயல் அப்படியே இருப்பதைப் பார்க்கிறீர்களே! ஒருவரும் இன்னும் சாப்பிடவில்லை' என்றான்.

கீர்:—எஜமானர் இன்று காலையில் சரியாகச் சாப்பிட்டாரா!

சமய:—காலையில்தான் அவர் முதலே வீட்டிலில்லையே! காந்தாமணியின் சாவுகாரியம் முடிந்து சாயங்காலந்தானே வந்தார். பலகாரமாவது கொண்டு கொடுப்பீர்கள் என்று செய்துவைத்தேன். நீங்களும் உள்ளேயே வரவில்லை. நான்போய் இரண்டுதரம் கேட்டேன். பேசாமலிருந்தார்...

கீர்வாணிக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. பொழுது விடிந்தால் தன் தம்பி வரப்போகிறான். அவன் வரும்போது எல்லோரும் சந்தோஷமான முகத்தோடு வரவேற்காது இப்படி மூலைக்கொருவராக இருந்தால் அவன் என்ன நினைப்பான் என்கிற பெரிய கவலைதான் முதலில் பாதித்தது. 'அவர் அந்தப்பரதேசிக்குழந்தையைக் கொண்டுவந்து நம்மிடம் அறிமுகம் செய்தபோது நான் மிகவும் அலக்ஷியமாக இருந்துவிட்டேனே! அது அவர் மனத்தைப் புண்படுத்தியிருக்குமோ!' என்கிற எண்ணம் ஒருகணம் மின்வெட்டுப்போல் தோன்றி மறைந்தது. தான் என்ன இருப்பினும் ஒரு பெண்பிள்ளை. ஆண்சிங்கத்தினிடம் அடங்கி நடக்கும் பெண்மானுக்கு இத்தனைக் கோபம் வந்தால் பிறகு விமோசனம் எப்படி! என்றும் தோன்றியதால் அதே மனோவேகத்துடன் சடக்கென்று மாடிக்குச்சென்றாள்.

பால், பலகாரம், பழம் முதலியவைகளைப் பின்னாலேயே சமயல்காரன் கொண்டு வைத்தான். நித்திரை வராது புண்ணியமூர்த்தி ஏதேதோ எண்ணமிட்டவாறு படுத்திருக்கையில் கீர்வாணி அருகில் சென்று விளக்கை ஏற்றிப்பின், "டாக்டர்!...(எப்போதும் இப்படித்தான் கூப்பிடுவது வழக்கம்) இதென்ன ஆச்சரியம்! இத்தனை சடுதியில் ஒருநாளும் தூங்கியறியாத நீங்கள் ஏன் படுத்துக்கொண்டீர்கள்! உடம்பு ஒன்றுமில்லையே!" என்று மிக்க பயபக்தியோடு கேட்டாள்.

இதைக்கேட்ட புண்ணியமூர்த்தி நிதானமாயும் ஆழமான பல யோசனைகளுடனும் கீர்வாணியை உற்றுநோக்கினார். ஆனால் பதில் பேசவில்லை.

மீண்டும் கீர்வாணி அவரருகில்போய் உட்கார்ந்து "டாக்டர்! காலை முதல் நீங்கள் சாப்பிடவே இல்லை என்று இப்போதுதான் தெரிந்தது. அகாலத்தில் நீங்கள் போஜனம் செய்யமாட்டீர்கள், ஆதலால் பலகாரமும் பழமும் கொண்டுவந்திருக்கிறேன். அதையாவது சாப்பிடுங்கள். என் மீது எந்தவிதமான குற்றமிருப்பினும் மன்னிக்கவேண்டும்." என்று உண்மையான மனக்குழைவுடன் கேட்டாள்.

புண்ணியமூர்த்தி தம்மையறியாது ஒரு பெருநகைபுரிந்து பின் "கீர்வாணி! உண்மையில் நீ குற்றம் செய்ததாகக்கூட உன் மனதுநினைத்ததா ! இது வாஸ்தவமா !" என்று மிக்க வியப்புடன் கேட்டார்.

கீர்வாணியின் முகம் சுண்டியது. வெட்கமும் துக்கமும் ஒருங்கே பொங்கியது. எப்படியாவது அவரை சிறிது ஆகாரமாவது சாப்பிடச் செய்யவேண்டுமென்கிற எண்ணத்துடன் தானே பலகாரத்தை எடுத்து அவர் வாயில் ஊட்டவந்தாள்.

இதைக் கண்ட புண்ணியமூர்த்தி கடகடவென்று நகைத்தவாறு "கீர்வாணீ ! ஏதேது? நீகூட திடீரென்று இத்தனை சிறந்த குணத்துடன் திருந்திவிட்டாய் என்பதைக் காண எனக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. உன்னை நான் முதல் முதல் அடையும்போது உண்டான சந்தோஷத்தை விட இன்று பதின்மடங்கு அதிகமாக ஆனந்தப்படுகிறேன்...

கீர்வாணி இடைமறுத்து "என்ன டாக்டர்! இப்படிப் பேசி என்னை மூக்கை ஒடித்துவிடுகிறீர்கள். எந்த அம்சத்தில் நான் தங்களுக்கு விரோதமாக நடக்கிறேன். ஆகக்கூடியும்...நிருபமா விஷயத்தை வேண்டுமாயின் நீங்கள் சொல்லலாம். ஆம்; இப்போதும் சொல்கிறேன், தாங்கள் தங்களுடைய ஒப்பில்லாத பெருமையை அடியோடுமறந்து இப்பெண்ணை வீட்டில் கொண்டுவந்தது கேவலமானதும் இளப்பத்திற்கு இடமானதுமாகத்தான் இருக்கிறது. நாமென்ன சிறியவர்களா! நம் சுகுமாரனே பெண்ணுகப் பிறந்திருந்தால் நாம் இத்தனை நாளைக்கு கொண்டு கொடுத்து சம்பந்தம் செய்திருக்கவேண்டாமா! அதோடு தாதாவும், பாட்டியுமாகக் கூட ஆகியிருக்கலாம். நாளைக்கே உங்கள் நாட்டுப்பெண் வரப்போகிருள். பெண்டாட்டி இறந்தபிறகுகூட மகாபரிசுத்தமாகக் காலத்தைக்கடத்தும் ஸ்ரீகாந்தன்......

என்று முடிப்பதற்குள் டாக்டர் குறுக்கிட்டு, "ஓகோ! ஸ்ரீ காந்தன் என்னைப் பரிகஸித்துப் பெண்ணைக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிடுவான் அல்லவா ? அடாடாடா ! காந்தனைப்போன்ற ஜிதேந்திரியனை இக் கலியில் காணவே முடியாதுதான். அவன் என்னைப் பரிகஸிப்பதை நான் மிகவும் வரவேற்கிறேன். கீர்வாணி! உனக்கது மிகவும் அவமானமாயிருந்தால் நான் இப் பரதேசிப்பெண்ணுடன் வெளியேபோய் தனிவாஸம் செய்கிறேன். நீயும் உன் மூத்த குமாரனும்...இஷ்டப்பட்டால் இளைய குமாரனும்கூட தாராளமாயிருக்கலாம். நீயோ சின்ன பாப்பாயில்லை. இவ் வருஷமே விவாகத்தைச் செய்து நாட்டுப் பெண்ணும் பிள்ளைகளுமாக வெகு குசாலாக இரு. உன் சந்தோஷத்திற்கு நான் முட்டுக்கட்டை போடுவதாக நினைக்காதே ! மாதா மாதம் நான் சம்பாதிப்பதை அப்படியே இந்த சமூகத்திற்கு அர்ப்பணம் செய்துவிடுகிறேன். இந்தமட்டும்தான் என்னால் செய்யமுடியுமேயன்றி மரணத்தறுவாயில் வாக்குக் கொடுத்ததை நான் ஒருநாளும் தட்டமுடியாது. அந்த துக்ககரமான மொழிகள் சதா என் ஹிதய ஒலியாக ஒலிப்பதை யாராலும் மாற்றவோ அழிக்கவோ முடியாது.

கீர்வாணி! அவள் உண்மையில் தாசிப்பெண்ணுக இருப்பினும் நான் மனப்பூர்வமாக அப்பரதேசியைக் கைவிடாமல் காப்பேன், இந்த பரதேசியோ நம்மைப்போன்ற உயர்ந்த குடும்பத்தில் பிறந்த உத்தமி. வீணுக இவளை நீ த்வேஷித்துக்கொண்டு பழிப்பாயானால் நான் வேறு ஒன்றும் செய்யமுடியாது. நானும் அந்த குழந்தையும் தனியாகப்போவதைத்தான் காண்பாய். இதுதான் உறுதிமொழி. பிறகு உன்னிஷ்டம். இனி இதைப் பற்றி வேறுபேச்சே வேண்டாம். நீயாகட்டும். உன் பிள்ளையாகட்டும் யார் எந்தவிதமான சாகஸங்கள் செய்தபோதும் ஒன்றும் இந்த புண்ணிய

இதய ஒலி

மூர்த்தியிடம் பலிக்காது. ஜாக்ரதை. உனக்குச்சொல்ல வேண்டியது இதுதான். மனிதப்பிறவிக்கு முக்யமானது கருணை, தயை, பச்சாத்தாபம், பரோபகாரம் இதுதான் முக்யத்வமாகும். அதன்படி முற்றிலும் நடக்க முடியாதெனினும் கூடுமானவரையில் நடந்து பகவானுக்கு உகப்பாக காலத்தைக் கடத்தவேண்டும். இந்த உண்மையை அறிந்து ஒரு கடுகளவாவது நடந்தால்போதும். கீர்வாணீ! இவ்விஷயமாக இனி என்னிடம் எதுவுமே ப்ரஸ்தாபிக்கமாட்டாய் என்று நினைக்கிறேன்." என்று ஒரே உறுதியாயும் தீர்மானமாயும் கூறினர்.

தான் வார்த்தைப் பராக்கில் கணவனின் மனத்தை மாற்றிவிடலாம் என்று மனப்பால் குடித்துவந்த கீர்வாணிக்கு இடுப்பு உடைந்ததுபோலாகிவிட்டது. அதற்குமேல் என்னபதில் சொல்வதென்று தோன்ருமல் விழிக்கும் கலவரத்தில் அவரைச்சாப்பிடச் செய்வதையும் மறந்து அப்படியே உட்கார்ந்தாள். அவள்மனத்தில்போராடும்எண்ணங்களை அளவிடமுடியாது.

## 12

உதயமாகிவிட்டது. 9 மணிக்கு ஸ்டேஷனுக்கு வண்டியுடன் சுகுமாரனும் கீர்வாணியும் போவதற்குத் தயாராஞர்கள். வண்டி வரும் நேரம் மாறியிருப்பதை இவர்கள் கவனிக்கவே இல்லை. 8 மணிக்கே வண்டி வந்துவிட்டதால் காப்டன் காந்தன் ஜம்மென்று வந்து இறங்கிவிட்டார்.



ஸ்டேஷனுக்கு ஒருவருமே ஆள் வராதிருப்பதைக் கண்டு மிகவும் கோபமும் வருத்தமும் உண்டாகியது. அசல் வடக்கத்தி ஆசாமியைப் போலவே அவர்மட்டுமின்றி அவருடைய அருமை மகள் ஸ்ரீலலிதகுமாரியும் காக்ஷியளித்தாள். வாடகை மோட்டாரில் 8 மணிக்கே இவர்கள் வந்துவிட்டதையறிந்து சுகுமாரனும் கீர்வாணியும் திடுக்கிட்டு வீதிக்குஓடிவந்தார்கள்.

பஞ்சாப்தேசத்துப் பெண்ணைப் போல் லலிதகுமாரி பைஜாமாவும் ஜிப்பாவும் அணிந்திருந்ததோடு நாகரீகத்தின் சிகரத்தை எட்டிப்பிடித்துவிட்டதுபோன்று தலையைப் பாப் செய்துகொண்டு ஜம்மென்று காரிலிருந்து இறங்கினாள்.


காரின் பின் ஸீட்டிலிருந்து ஸ்ரீமான் காந்தன் முதலில் இறங்கிப் பின் வடநாட்டுப் பெண்மணியொருத்தியை வெகு அன்புடனும் மரியாதையுடனும் கையைப்பிடித்து மெல்ல இறக்கினன். அம்மங்கை மடவன்னம் புன்முறுவலுடன் இறங்கினாள்.



போர்டிகோவின் உள்புறமே நிற்கும் கீர்வாணிக்குத் தன் மருமகளை அடியோடு அடையாளமே தெரியாது அசல் பஞ்சாபிப் பெண் என்றே தீர்மானித்தாள். அதோடு மற்றொரு வடஇந்திய மாதைத் தன் தம்பி இத்தனை சுதந்திரமாக அழைத்துவருவதை வியப்பின்மேல் வியப்பாகப் பார்த்தபடியே அசந்து நின்றுவிட்டாள்.

லலிதகுமாரி காரிலிருந்து இறங்கியவுடனே சுகுமாரனை அன்பு சொட்டும் விழியால் ஆனந்தம் நிறைந்த மனத்துடன் பார்த்தபடியே, "என்ன அத்தான்! அசல் நாட்டுப்புறத்தானைப்போல் நிற்கிருய்? ஸ்டேஷனுக்கு வருவதை அடியோடு மறந்துவிட்டாயா! அல்லது அவர்களே வந்து சேரட்டுமே என்று பேசாமலிருந்துவிட்டாயா? ஏன் இருவரும் இப்படி இமை இசைக்காமல் பார்க்கிறீர்கள்... அத்தை!... சின்ன அத்தான், அத்திம்பேர், இருவரும் எங்கே? என்னைப்பார்த்தால் உன் மருமகளா! அல்லவா! என்று சந்தேகமாகிவிட்டதா... அதனால்தான் விரைக்க விரைக்கப்பார்க்கிருயா!" என்று தானே கடகடவென்று பேசினாள்.

நல்ல சில்குசேலை உடுத்திக்கொண்டு பூங்கொடியோ! பொன்னந்தழையோ! என்று ஐயுறும்படியாய் அழகுத்தெய்வம்போல் லலிதகுமாரி



வருவாள் என்றும், ஜாட்டிபோல் மின்னல் முழங்காலில் புரளாவிடினும் பிச்சோடாவாவது. பண்ணுவது போட்டுக் கொண்டிருப்பாள் என்றும் நினைத்ததற்கு விரோதமாய் அசல் பஞ்சாபியப்பெண்போல் வந்திருப்பதைக்கண்டு அவளை அறியாத வியப்புக்கடலில்தான் மூழ்கினாள்.

அதைவிட அதிசயமாய் காந்தன் மற்றொருபெண்ணைக் கூட அழைத்து வந்ததைக்கண்டு அவளால் அந்த அதிசயத்தைத் தாங்கவே முடியவில்லை. ஒருவேளை லலிதகுமாரியின் சினேகிதையா! அல்லது உபாத்தியாயினியா! என்று பலயோசனைகள் உண்டாகிவிட்டன. லலிதகுமாரி கேட்டதுகூடக் காதில் விழவில்லை.

பிறகு சற்று சமாளித்துக்கொண்டு லலிதகுமாரியைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "வாடி என் செல்லமே!...உண்மையில் உன்னை நான் ஒரு பஞ்சாபியப்பெண் என்றே நினைத்துதான் பேசாமலிருந்தேன். இதென்ன வேஷம்? அழகாகசேலை உடுத்திக்கொள்ளக்கூடாதா! என்று அப்போதிருந்த மனோநிலைமையில் தன்னையறியாமலேயே கூறிவிட்டாள்.

இதற்குள் ஸ்ரீகாந்தன் அந்த பெண்மணியை அழைத்துவந்து கீர்வாணியின் முன்பு நிறுத்தி, கீர்வாணியை அந்த பெண்ணுக்குக்காட்டி, "இவள் தான் என் சகோதரி. இவன்தான் இவளுடைய மூத்தமகன். நமது லலித குமாரியின் கணவனாகப்போகிறவன்" என்று அறிமுகப்படுத்திப் பின் கீர்வாணிக்கு அந்த மாதைக்காட்டி, "அக்கா! உனக்கு மிக்வும் வியப்பாக விருக்கும். காலத்தின் லீலை. இவள்தான் எனது இளைய மனைவி. ஸ்ரீமதி காந்தன். இவள்பெயர் மாயாதேவி. மகாகெட்டிக்காரி. மிகவும் நல்லவள். நமது லலிதாவின்மீது உயிராயிருப்பவள். ஜாதியில் எதுவானால் என்ன? நான் தற்காலநாகரீகப்படி ரிஜிஸ்தர்செய்துகொண்டிருக்கிறேன். இவளும் என்னோடு சீமைக்கு வரப்போகிறாள். உன்னைப்பார்க்கவேண்டுமென்று மிக்க ஆவலாக இருப்பதால் இங்கு அழைத்துவந்தேன். இவளுடன் இவள் சகோதரன் சகோதரி எல்லோரும் வந்திருக்கிறார்கள். அவர்கள் ஹோட்டலி லேயே இறங்கி இருக்கிறார்கள். என்னயோசிக்கிறாய்?...சிவகுமாரனும் அத்திம்பேரும் எங்கே?"... என்று கேட்டான்.

குஜராத்தி மாது தனது பாஷையில் நமஸ்காரம் கூறிப் பின் சுகுமாரன் கைகளைத் தானே வலுவில் இழுத்துக் குலுக்கிப் பின் ஆங்கிலத்தில் "என்ன சங்கோஜம் சார்! நீங்கள் என் மாப்பிள்ளையல்லவா! எனக்குத் தானே சுதந்திரம்." என்று கூறி ஒரு புன்னகை புரிந்தாள்.

எக்காரணத்தினாலோ தெரியவில்லை, கீர்வாணியின் இதயத்தில் பளீர் என்று செம்மட்டியால் அறைந்ததுபோன்ற ஒரு அதிர்ச்சி உண்டாகியது. "வடநாட்டுக்காரியைக் கல்யாணம் செய்துகொண்டிருக்கிறானா! இதென்ன அனியாயம்! ஸ்ரீகாந்தனா இப்படிச் செய்கிறவன்! ஸ்ரீ காந்தனா இம்மாதிரி செய்துகொண்டு பகிரங்கமாக வந்திருக்கிறான்! ஐயையோ! மகா புண்ணிய புருஷனாகிய என் கணவன் இந்த வயிற்றெரிச்சலைக் கண்டால் என்ன நினைப்பார்!" என்கிற எண்ணங்கள் அலைபோல் மோத ஆரம்பித்தன.

இந்த கலவரத்தில் வந்தவர்களை உபசரித்து அழைத்துப்போவதைக் கூட மறந்துபோய் நின்றாள். சுகுமாரனும் லலிதகுமாரியின் அலங்காரத்தைக்கண்டு மருண்டுபோனான். அதோடு மாமன் ஒரு மாமியுடன் வந்திருப்பதைக் காண அவன் மனதுகூட சற்று துணுக்குற்றது. இந்த அபூர்வகாக்ஷியை மாடியிலிருந்து எங்கே தன் அப்பாவும் சகோதரனும் பார்க்கிறார்களோ! என்கிற சந்தேகத்துடன் மாடிப்பக்கம் நோக்கினான்.

சிவகுமாரன் பால்கனியில் நின்றுகொண்டு பார்ப்பதைக் கண்டதும் அவனையறியாது பின்னும் ஏதோமாதிரியான ஆத்திரமும் பொறுமையும் உண்டாகியது. புண்ணியமூர்த்தி உள்ளிருந்து வெளியில் வந்து "ஓ! இதற்குள் வண்டி வந்துவிட்டதா! என்னம்மா லலிதா! சவுக்யமா?" என்று வெகு சாதாரணமாகக் கேட்டார்.

கீர்வாணியின் முகமே மாறிவிட்டது. அவள் கணவன் முகத்தையும் பார்க்கக் கூசுகிறாள். தம்பியின் முகத்தையும் பார்க்க அஞ்சுகிறாள். திரு சங்கு சொர்க்கம்போல் தவிக்கும்போது புண்ணியமூர்த்தி காந்தனைக் கை குலுக்கி வரவேற்றார். அதே சமயம் காந்தனுடன் வந்துள்ள வடநாட்டு நங்கை "வந்தனம்! வந்தனம்! தங்களைப்பற்றி என் கணவர் அடிக்கடி சொல்லுவார். உங்களை எல்லாம் பார்த்தது மெத்த சந்தோஷமாயிற்று." என்று ஆங்கிலத்தில் கூறியபடியே புண்ணியமூர்த்திக்குத்தானே வலு வில் கைகுலுக்கினாள்.

அதே சமயம் காந்தன், "இவள்தான் என் மனைவி மாயா. நன்றாகப் படித்தவள். சங்கீதமும் நாட்டியமும் இவள் கொடுத்த பிச்சைதான். அந்த பக்கத்தில் வெகு ப்ராபல்யம். கொஞ்சங்கூட கர்வமோ, பெருமையோ இல்லாது வெகு உத்தம குணத்துடன் ஒழுகுபவள்" என்று அவளது ப்ர தாபத்தை அடுக்கிக்கொண்டே போனான்.

புண்ணியமூர்த்தியின் ஆச்சர்யம் கரைகடந்தது. குத்தலான பார்வை யுடன் தன் மனைவியை நோக்கினார். பாவம்! கீர்வாணியின் முகத்தோற் றத்தின் அத்புதத்தை எப்படித்தான் வர்ணிப்பது? அசடு வழிகிறது. தலை யைக் கவிழ்ந்துகொண்டாள். சுகுமாரனையும் அதேபோல் ஏற இறங்கப் பார்த்தார். அவன் முகத்திலும் அசடு வழிந்து தாண்டவமாடியது.

புண்ணியமூர்த்தி நமட்டுச்சிரிப்பு சிரித்தபடியே காந்தனிடம் தடபுட லாகப் பேசி உபசரித்து உள்ளே அழைத்துச்சென்றார். கீர்வாணி இவர் களுக்காக ஒழித்துவிடப்பட்டிருந்த விடுதிகளைக் காட்டினாள். தம்பிமட்டுந் தான் வரப்போகிறான் என்கிற யோசனையுடன் செய்திருந்தால் மாயா வுக்குத் தனி விடுதி ஒழிக்கவாரம்பித்தாள்.

லலிதகுமாரி பைஜாமாவும் ஜிப்பாவுமாக நிற்பதை காணச் சகிக்காது வெறுத்தாள்; ஆனால் அதைக் காட்டிக்கொள்ள முடியுமா! உள்ளுக்குள் ளேயே தவித்துப்போனாள்.

மாயாதேவிக்கு ஒரு வேலைக்காரி, லலிதகுமாரிக்கு ஒரு வேலைக்காரி, காந்தனுக்கு ஒரு வேலைக்காரன் இவர்களுக்கு ஒரு குமாஸ்தா ஆகிய பரிவாரங்கள் அடுத்த ஜட்காவில் வந்திறங்கினர்கள். வந்தவர்களுக்கு காப்பி பலகாரங்கள் கொடுத்து உபசரித்தார்கள்.

மாயாதேவிக்குத் தமிழ் பேசத் தெரியாது. ஆகையால் ஆங்கிலத்தி லேயே சக்கைபோடுபோட்டுத் தடபுடல் செய்கிறாள். சிவகுமார் சாவகாச மாக இறங்கிவந்து மாமாவை விசாரித்தான். லலிதகுமாரியைப் பார்க்கும் போதே எரிச்சலாக இருந்தது; எனினும் ஒருவாறு விசாரித்தான்.

மாயாதேவியைப்பார்த்தவுடனே சிவகுமாரனுக்கு ஏதோ ஒருவிதமான சந்தேகம் உண்டாகியது. உடனே மாடிக்குஓடி ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தான். இரண்டு மூன்று புகைப்படங்களை உற்று உற்றுப் பார்த்த பிறகு அதை எடுத்துக்கொண்டு நேரே மாயாவிடமே வந்து இரண் டையும் பார்த்து சந்தேக நிவர்த்தி செய்துகொண்டான். ஆனால் அதை யாரிடமும் அப்போது கூறவில்லை.

வீடு ஒரே தடல்புடல் படுகிறது. ஸ்ரீ காந்தனைப் பார்க்கவரும் ப்ரமு கர்களின் எண்ணிக்கை கூறத்திறமன்று. அவர்களுக்கெல்லாம் ஸ்ரீமதி

இதய ஒலி

மாயாதேவி கை குலுக்கியும் வந்தனம் செய்தும் பேசி மகிழ்வதைப் பார்த்த கீர்வாணியம்மாளுக்கு இன்னதென்று விவரிக்க இயலாத வேதனை செய்கிறது. உண்மையிலேயே மகா உத்தமராகிய தன் கணவன்மீது அபாண்டமான பழியை நினைத்ததற்கு ப்ராயச்சித்தமா இது! என்றுகூடத் தோன்றியது. ப்ரபல ஸினிமா நக்ஷத்திரங்களும் படமுதலாளிகளும் டைரெக்டர்களும் கூட்டங்கூட்டமாக வருவதையும் ஸ்ரீமதி மாயாதேவி அவர்களிடம் பேசிக்கொக்கரிப்பதையும் காணப்பின்னும் பதின்மடங்கு வியப்பும் வெறுப்பும் சுகுமாரனுக்குக்கூட உண்டாகியது.

சினிமா நடிகர்களுக்கு மாயாதேவி கை குலுக்குவதையும் லலிதகுமாரி கூட பன்றிக்குட்டியுடன் சேர்ந்த கன்றுக்குட்டி மாதிரி கை குலுக்குவதையும்காண கீர்வாணிக்கும் சுகுமாரனுக்கும் கோபமும் அருவருப்பும் அபாரமாகப் பொங்கின. இப்படியா ஒரு பெண்ணை வளர்ப்பான் என்றும் எண்ணினார்கள். பகிரங்கமாகச் சொல்வதற்கும் பயம். இருவர் முகத்திலும் சொட்டும் பயித்தியக்காரக் களைக்கு அளவிட முடியாது.

தன் தாயார் அடுக்கறையில் ஏதோ வேலை செய்துகொண்டிருக்கும் சமயத்தையறிந்த சிவகுமார் "அம்மா! பேஷ்! விருந்தாளிகளின் சிறப்பு கூறமுடியாத மகிமையாயிருக்கிறதே. இப்போது வந்து பேசும் பெரிய மனிதர்கள் யார் தெரியுமா? டைரெக்டர்கள் என்றும் முதலாளிகள் என்றும் பெயர் வைத்துக்கொண்ட பூதங்கள், பிசாசுகள். தன் வயிற்றின் கொடுமையாலோ அல்லது இந்த ராக்ஷஸப் பூண்டுகளின் பசப்பு வார்த்தைகளில் மயங்கியோ விட்டில்பூச்சி விளக்கில் விழுவதுபோல் வந்து ஸினிமாவில்நடிக்க ஒப்புக்கொண்ட நூற்றுக்கணக்கான பெண்களின் கற்பை, அப்படியே ரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளைப்போல் உறிஞ்சி ஏப்பம் விடும் சில பெரிய மனிதர்கள்தான், ஸ்ரீமதி மாயாதேவியை...இல்லை! இல்லை...தப்பிதமாகச் சொல்லிவிட்டேனே! உனது அருமைத் தம்பி அகமுடையாளைப் பேட்டி காண வந்திருக்கிறார்கள். தெரியுமா! வீடேறி மனிதர் வந்தாலும் போதும். கவுரவமும் கண்ணியமும் தாண்டவமாடும். கீர்த்தியும் புகழும் உச்சத்தை எட்டும்.

அம்மா! கலிகாலதெய்வம் கண்மூடியல்ல. மகாபரிசுத்த ஆத்மாவாகிய அப்பாவின்மீது நாக்கூசாது அபாண்டத்தைக்கூறினையே, இனிமேல் அம்மாதிரி சொல்லமாட்டாயே...ஸ்ரீமதி மாயாதேவி யார் தெரியுமா! அந்த அழகி வடநாட்டு ப்ரபல ஸினிமா நக்ஷத்திரம்...தாசிகுல திலகம். பல படங்களில் பல தடியன்களுடன் கூசாமல் மனைவியாயும், வைப்பாட்டியாயும். நடித்துப்புகழ்பெற்றவள். மாமாவின் தலையை எப்படித்தடவி குல்லாய் போட்டாளோ! தெரியவில்லை. உனக்கு நான் சொல்வது நம்பிக்கை இல்லையென்றால் இதோ இந்தப்படத்தைப்பார்த்துச் சந்தோஷப்படலாம். எத்தனை விதமான கேளிக்கைகள், அலங்காரங்கள்! பார்த்து இன்புற்று அண்ணாவுக்குக்காட்டு. இந்த சூட்டுக்கோலின் முத்திரையின் அடையாளத்துடன் இனி அப்பாமீது அனுவசியமாக உளறுதேம்மா! நெருப்பை ஈ மொய்க்காது என்பது இனியாவது நினைவிருக்கட்டும்." என்று கூறிவிட்டு சடக்கென்று போய்விட்டான்.

கீர்வாணி சிவகுமாரன் கொடுத்த புத்தகத்தைப்பார்த்தாள். மாயாதேவியின் சினிமாத்தோற்றங்கள் வித்விதமாகவிருப்பதைக் காணக்காண உள்ளம் கொதித்து, ஆத்திரம் பொங்கியது. அதேசமயம் விளக்கெண்ணெய் குடித்த முகம்போன்ற ஸேவையுடன் சுகுமாரன் அங்குவந்து "தம்பி

என்ன வேதாந்தம் பேசிக்கொண்டிருந்தான்!" என்று அப்போதும் மமதையுடன் கேட்டான்.

கீர்:—வேதாந்தமா! சரியான வேதாந்தமும் உபநிஷத்தும்கூடபேசி இதோ காக்ஷியும் காட்டிச்சென்றான். இந்தா! இந்த புத்தகத்தைப்பாரு. எனக்கு உடம்பே பற்றி எரிகிறது.—என்று கூறியவாறு அந்த புத்தகத்தை அவன் முன்பு எறிந்துவிட்டு வெளியேபோனாள். மாயாதேவி ப்ரபல ஸினிமா நக்ஷத்திரம் என்பதைப்படித்த உடனே அவன் உள்ளமும் கொதித்தது.

## 13

பேதை நிருபமாவுக்கு லலிதகுமாரி முதலியவர்கள் வரப்போவது ஒன்றுமே தெரியாது; ஆகையால் வருத்தத்துடன் படுத்திருந்தாள். உடம்பு ஒன்றுமில்லாததால் நர்ஸை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார். நிருபமாவுக்கு மனதும் சரியாயில்லை. பொழுதும்போகவில்லை. தன் தாயாரை எண்ணிப்புலம்பிக்கொண்டிருந்த சமயம் கீழே தடபுடலான பேச்சுக் குரலும் ஆரவாரமும் கேட்டதால் அவளுக்கு ஒன்றுமே புரியாதிருந்தது.

காந்தாமணியிடம் பாட்டுசொல்லிக்கொண்டே சில பெண்கள் புண்ய மூர்த்தியின் அனுமதிபெற்று நிருபமாவைக்கண்டு உபசாரவார்த்தைகூறிச் சென்றார்கள். மங்களகரமாக உள்ள தம்வீட்டில் சாவுபேச்சும் உபசார வார்த்தைகளும் கண்ணீர்விடுவதும் சுகுமாரனுக்குச்சற்றும் பிடிக்கவில்லை யெனினும் அதை வெளியிட்டுக்கூறவும் அஞ்சினான்.

லலிதகுமாரி, மாயாதேவியின் சினேகிதர்கள் வருவதையும் பலவிடங்களில் விருந்துநடத்த ஏற்பாடுசெய்து அழைத்திருப்பதையும் பெரிதும் ஆர்வத்துடன் வரவேற்று மகிழ்ந்தாள். அன்றுமாலையே நடிகர் சார்பாக ஆனந்தநிலயத்தில் மாபெரும் தேக்கச்சேரிக்கு ஏற்பாடாகி இருந்தது. நடிகர்களைப்பார்ப்பதும் அவர்களுடன் பேசுவதும் ஓர் ப்ரம்மானந்தப் பதவியாயும் பேரானந்தமாயுங்கூட லலிதகுமாரி எண்ணினாள்.

ரயிலில்வந்த அலுப்புகூட இந்த கோலாகலத்தில் மறந்தது. எல்லோரும் எழுந்துசென்ற பிறகு மாயாதேவி உடைமாற்றிக்கொண்டு ஹாய்யாக ஒரு சோபாவில் சாய்ந்தாள். ஒரு தாதி காலைப்பிடிக்கிறாள். ஒரு தாதி புட்டியிலிருந்து பானத்தை உடைத்துத் தருகிறாள். ஸ்ரீ காந்தன் தன்னைத் தேடிக்கொண்டுவந்த நண்பர்களிடம் பேசிக்கொண்டிருந்தான்.

மாயாதேவி ஒய்யாரமாகக் குடிப்பதும் பிறகு உயர்ந்தவகை ஸிகரேட்டைப் பிடிப்பதும் கண்ட கீர்வாணியின் குடல் கொதிக்கிறது. அவளால் இந்த அவமானத்தையும் சங்கடத்தையும் தாங்கவேமுடியாது போய் விட்டதால் சொல்லவும் மாட்டாது மெல்லவும் மாட்டாது தவிக்கிறாள்.

சுகுமாரன் முகத்திலும் ஈயாடவில்லை. 'லலிதகுமாரி இன்னும் சினிமா கூட்டத்துடன் பேசுவதில் மெய்மறந்திருக்கிறாளேயன்றி எனது மனத் துடிப்பு தெரிந்து இன்னும் என்னிடம் வந்து பேசவில்லை பார்த்தாயா!' என்று நினைக்கும்போது அவன் சரீரம் குபீர் என்று எரிவதுபோல் தோன்றியது. மாமன் சிகரேட் பிடிப்பதும் குடிப்பதும் தோற்றுவிடும்படி மாயா தேவி போட்டியிடுவதைக் கண்டு 'இத்தகைய அருமையானபழக்கம் லலித குமாரிக்குக்கூட வந்துவிட்டதோ?' என்கிற சந்தேகம் உண்டாகியது.

நேரே தாயாரிடம் ஓடிவந்தான். முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடிக்கிறது. அவமானத்தின் சாயல் முகத்தையே மாற்றிவிட்டது எனலாம்..."அம்மா! இதென்ன அனியாயம்! கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோல் நம் கதை முடிந்ததே. மாமாவை நீயாவது சுதந்திரமாக

அழைத்து இந்த வெட்கக்கேட்டைச் சொல்லி முறையிடக் கூடாதா! அப்பாவைத் தேடிக்கொண்டு மிகவும் கண்ணியமானவர்கள் வருகிறார்கள் இந்த அலங்கோல ஆபாஸத்தைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள்? லலிதா உன்னிடங்கூடப் பேசவே இல்லையா! அவள் எங்கே காணவில்லையே?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

சீர்:—நான் என்னடா செய்வேன்? சிவகுமாரன் இத்தனை நேரம் வந்து காரியுமிழ்ந்துவிட்டுச் சென்றான். எனக்கும் மானம் போகிறது. எங்காவது ஓடிவிடலாமா என்றும் தோன்றுகிறது. உன் மாமன் இருந்த இருப்பென்ன! இப்போது அவன் இருக்கும் நிலைமை என்ன? எனக்கே நம்ப முடியவில்லையே! நானும் அப்போது முதல் அவனையே எதிர்பார்த்துக் கொண்டுதானிருக்கிறேன். அவனிடம் அரைவினாடிகூடப் பேசவிடாமல் எந்த தடியன்களோ தடிச்சிறுக்கிகளோ உட்கார்ந்திருப்பதால் தவிக்கிறேன். தாயில்லாக் குழந்தையாயிற்றே! என்று மிகவும் செல்லமாக வளர்ப்பதாக நான் எண்ணி பெரிய ஏமாற்றத்தைதான் அடைந்துவிட்டேன். அவளுடைய தாயாரின் மரணத்தறுவாயில் அவள் சொல்லிய வார்த்தைகள் இன்னும் என்னிதய ஒலியாக ஒலிக்கின்றன என்றாலும் அப் பெண்ணை பெண்தன்மையாகவே வளர்க்காமல் இப்படியா விடுவது? இப்போது வந்த கூத்தாடிச் சிறுக்கிகளுடன்கூட போய்விட்டாளடா! என்னடா ஷூட்டிங்கா! பூட்டிங்கா! ஏதோ இப்போது நடக்கப் போகிறதாம். அந்த கூத்தாடிகளுடன் இவள் குசாலாகப் போய்விட்டாள். அந்த ராணி சற்று ச்ரமப்ரகாரம் செய்துகொண்டு வருவதாக வேறு சொல்லியனுப்பினாள். என்ன வெட்கக்கேடோ! என்னால் சகிக்கமுடியவில்லை. அப்பாவையும் சிவகுமாரனையும் பார்க்கவே என்மனது கூசுகிறது.—

என்று சரமாரியாக அடுக்கிக்கொண்டு போவதைக்கேட்ட சுகுமாரனுக்கு எல்லாவற்றையும்விட லலிதகுமாரி சினிமாக்காரர்களுடன் போய்விட்டதைக்கேட்டதும் அவன் கண்களில் நெருப்புப்பொறி பறந்தது......

"என்ன!......சினிமாக்காரிகளுடன் போனாளா! லலிதாவா போனாள்! ஏம்மா! நீ வேண்டாமென்று சொல்வதற்கென்ன?... பார்த்துக்கொண்டா பேசாதிருந்தாய்! அப்போது வந்திருந்த அத்தனைபேரும் வெறும் அல்காவான சாக்கடையாயிற்றே! சினிமாக்காரிகளிலேயே ஒரு சிலர் சற்று மேலான முறையில் இருக்கிறார்களாம். அத்தகையவர்கள்கூட அல்லவே இப்போது வந்தவர்கள். அட க்ரகசாரமே!...

அம்மா! ஒரே வார்த்தை. லலிதகுமாரி வந்ததும் முதலில் இந்த பஞ்சாபிய வேஷத்தைக் களைந்துவிட்டு உன்னைப்போல சேலை உடுக்கச் சொல்லு...அப்படி நீ சொல்லவில்லையானால் நானே கட்டாயம் சொல்லிவிடுகிறேன்.'' என்று கர்ஜித்தான்.

இதைக் கேட்டுக்கொண்டே அவ்வழியே செல்லும் புண்ணியமூர்த்தி ஒருவிதமான பார்வையுடன் நமட்டுச்சிரிப்பு சிரித்துக்கொண்டே சென்றார். அதைப்பார்த்த இருவரின் முகத்திலும் அசடு வழிந்தது.

புண்ணியமூர்த்தி மாடிக்குச் சென்றார். முன் பக்கத்திய விசாலமான ஹாலில் ஸ்ரீமதி மாயாதேவி ஒரு சோபாவில் படுத்துக்கொண்டு ஸிகரேட் பிடிக்கிறாள். ஒரு தாதி காலைப் பிடிக்கிறாள்.

இந்த காக்ஷியை தூரவிருந்து பார்த்த புண்ணியமூர்த்திக்குத் திடுக்கிட்டுத் தூக்கிவாரிப்போட்டது. "என்ன அனியாயம்! பெண்பிள்ளை குடிப்பதும் ஸிகரெட் பிடிப்பதும் என்ன விபரீதம்!'' என்று ப்ரமிப்புடன் ஒரு நிமிஷம் நின்று பார்த்தார்.



• இந்த காக்ஷியை கீர்வாணிக்கு காட்டவேண்டுமென்று கிடுகிடுவென்று கீழே வந்து அவள் கையைப் பிடித்து தடதடவென்று இழுத்துக் கொண்டு போய் காட்டி "கீர்வாணி! பாரு! பாரு...நன்றாகப்பாரு. கண் குளிர ஆனந்தமாகப்பாரு. உன் தம்பியின் எதிரில் நான் மானங்கெட்ட வாழ்க்கை நடத்துவதாயும் அந்த ஜிதேந்திரியன் என்னைப்பார்த்துப் பரிகஸிப்பான் என்றும் பயந்து நடுங்கி அபாண்ட வார்த்தைகளை வாய்கூசாது சொன்னாயே! கீர்வாணி! கலிகால தெய்வம் கண்மூடியல்லவென்பதை இனியாவது நம்புகிறாயா! உன் கணவன் அத்தனை மோசமானவனல்ல என்பதை இனியாவது நம்புகிறாயா! நீ மிகமிகக் கேவலமாக எண்ணி ஏளனமாகப் பேசிவந்த தாசி காந்தாமணியின் காலில் ஒட்டிய தூசிக்கும் இந்த சினிமாக்காரி ஈடாகமாட்டாள் தெரியுமா"...என்று கூறுவதற்குள்

கீர்வாணியின் இதயம் வெடித்துவிடும்போல் துக்கம் நிரம்பி விட்டது. அடுத்த க்ஷணமே அத்துக்கம் தாங்காமல் விம்மிக் கொண்டு வந்தது.

அவளையறியாது கண்ணீர் பொங்கி வழிய நாத்தடுமாற "டாக்டர்! என்னறியாமையை மூடமதி விபரீதப்போக்கை மகாபுனிதமூர்த்தியாகிய தாங்கள் மன்னிக்கவேண்டும். நெருப்பை ஈ மொய்த்ததாக நான் அறிவிழந்து எண்ணிக்கூசாமல் சொல்லியதற்குக் கைமேல் பலனைக் பகவான் ஓர் பெரிய ஊழல் மலையையே என் முன்பு புரட்டிவிட்டார். என் மதியீனத்தை க்ஷமிக்கவேண்டும்" என்று கதறினாள்.

புண்ணியமூர்த்திக்கு கீர்வாணியின் மனோவேகம் நன்றாகத்தெரிந்தது. அவளை முதுகில் தட்டிக்கொடுத்துத் தன் கைக்குட்டையினால் கண்ணைத் துடைத்துப்பின், "கீர்வாணீ! அழாதே. உன் மனத்தொந்தரவின் ஆழத்தை நானறிந்துகொண்டேன். யானைக்கும் அடி சறுக்கும் என்கிற பழமொழிப்படிதான் முடிந்தது. இனி இம்மாதிரி துடுக்காக வீராப்பு பேசாதே, என்று பகவான் உனக்கு ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுத்ததாகவே நான் சந்தோஷப்படுகிறேன்.

கீர்வாணீ! இந்த அபூர்வமான மாறுதலுக்கு அடையாளமாக நீ என்மனம் களிக்க நடந்துகொள்ள இனி பின்வாங்க மாட்டாயல்லவா! இந்தப்பரதேசிக் குழந்தையிடத்தில் நீ பக்ஷமாக நடந்துகொண்டு பழைய இழிவான எண்ணத்தை மாற்றிக்கொண்டால் அதுவே எனக்குப்போதும். கடவுளின் கருணைக்கும் மனோல்லாஸத்திற்கும் பாத்திரமாகவேண்டுமானால் முதலில் ஏழைகளிடத்திலும் பரதேசிகளிடத்திலும் பச்சாத்தாபமும் தயையும்காட்டி உழைக்கவேண்டும். அந்த ஒன்றிற்குக்கடவுளின் உள்ளம் குளிர்வதுபோல் மற்ற எதிலும் குளிராது தெரியுமா! இத்தனைவருஷமாக நீ என்னிடம் பழகியும் என்னை அறிந்துகொள்ளாது போனதற்குக்கூட நான் விசனிக்கவில்லை. உன் மனத்தில் ஈ விரக்கமற்றுவிட்டதே. நீ பாபத்தைப்பங்கெடுத்துக்கொள்ளத் துணிந்துவிட்டாயே! என்றுதான் நான் வருந்துகிறேன். உனது இந்த புதிய மாறுதல் அந்த அழுக்கையும்போக்கிவிட்டது என்று நினைக்கிறேன். வா! இப்படி வா...உலகத்தில் மனிதவர்க்கத்தின் திக்கே இல்லாத இப்பரதேசிக்குழந்தைக்கு உன்மனமார வாழ்த்தி உன்கையால் ஆகாரத்தைக் கொடுத்துவிட்டுப்போ பார்க்கலாம்.—

என்றுகூறி நேரே நிருபமா படுத்திருந்த இடத்திற்கு பலவந்தமாக அவளை நடத்திக்கொண்டு சென்றார். நிருபமா தாங்கமாட்டாத துக்கத்துடன் தேம்பித் தேம்பி புலம்பிக்கொண்டு குப்புறப் படுத்திருப்பதைப் பார்த்ததும் புண்ணியமூர்த்தியின் உள்ளம் உருகியது, அவர் கண்களில் நீர் துளிர்த்தது...கீர்வாணி ஓட்டமாகச் சென்று நிருபமாவைத் தூக்கித் தன் மடியில் கிடத்தி "கண்ணூ ஏம்மா அழுகிறாய்? இதோ பாரு..." என்று கூறி நிருபமாவின் கண்களைத் துடைப்பதைக் கண்ட புண்யமூர்த்தியின் சந்தோஷமும் வியப்பும் உச்சஸ்தாயியை எட்டியது. இந்த காக்ஷி ஒரு கண் கொள்ளாத ஆனந்தமாகவே அவருக்குத் தோன்றியதால் இமை இசையாது பார்த்துக்கொண்டிருந்தார்.

நிருபமா இக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்ப்பதற்குள்கீர்வாணி தன் மடியில் சாத்திக்கொண்டு கண்களையும் துடைப்பதைக் கண்டு ஒன்றுமே தோன்றாது ப்ரமைபிடித்தமாதிரி உற்று உற்றுப் பார்த்தாள். பேசவே தெரியாது கீர்வாணியைப் பார்த்தபடியே தம்பித்துப்போனாள். எனினும் துக்கம் பீறிக்கொண்டு வந்தது. "நாம் கீர்வாணியின் மடியிலா இருக்கிறோம்... இது உண்மையா!" என்ற சந்தேகமும் உதித்தது.

183089

★சுதந்திர உரிமையைக் காப்பாற்ற
கடனுகக் கொடுங்கள்

★உங்கள் சொந்த நாணய செலாவணியைப்
பாதுகாக்க கடனுகக் கொடுங்கள்.

★

# நேஷனல் சேவிங்ஸ்
# சர்டிபிகேட்டுகளை
## வாங்குங்கள்!

★

*(எல்லா போஸ்டாபீசுகளிலும், அல்லது
ஜில்லா அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட
ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.)*

# நந்தவனம்

## "வஸந்த ருது" மலர்

**20 ஸ்த்ரீ எழுத்தாளர்களின் அருமையான புதிய மலர்கள்**

சிறுகதைகள், சரித்திரம், கவிதை, நாடகம், ஜீவியக்குறிப்பு, ஹாஸ்யம், யாத்திரைக்குறிப்பு, உண்மைச்சித்திரம், கட்டுரைகள் முதலியன, அழகிய படங்களுடன், நல்ல பேப்பரில், 'ஒயிட்போர்ட்' ராப்பருடன் டபில்க்ரௌன் அளவில் வைகாசியில் வெளிவரும்.

தேதி "மோகினி" மே இதழில் அறிவிக்கப்படும்.

விலை ரூ. 1—8. 31—3—*44வரையில்தான் ரூ. 1—4*

**நிபந்தனைகள்**

1. மணியார்டர் மூலமாகத்தான் பணம் அனுப்பவேண்டும். போஸ்டல் ஆர்டரோ, செக்கோ அனுப்பவேண்டாம்.
2. டி பிரசுரம் "ஸர்டிபிகேட் ஆப்போஸ்டிங்" வாங்கி அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பிய பிரதி தங்களுக்குக் கிடைக்காவிடில் நாம் ஜவாப்தாரியல்ல. ரிஜிஸ்தர் போஸ்ட் மூலம் அனுப்பவேண்டுமானல் 3 அணு அதிகம் செலுத்தவேண்டும்.

# தமிழுலகில்

## இதுவே முதல் முறை

முற்றிலும் அங்கனமணிகளின் சிறந்த எழுத்து மலர்களைத் தாங்கிவரும் அத்புத வெளியீடு நந்தவனம் ஒன்று தான். இத்தகைய விசேஷ வெளியீடு தமிழுலகில் மிக்கப் புதுமையை விளைவிக்கும் சுகந்த மலராகும்.

★

ஜமு




★

**20**

ஸ்த்ரீ எழுத்தாளரின் இனிய தமிழ் விருந்து.

**20**

அழகிய படங்கள்.

விலை, சலுகை விவரங்களுக்கு உள்ளே பார்க்கவும்

NANDAVANAM—A LADIES' SPECIAL.

# "JAGANMOHINI", SINGAPERUMALKOIL.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL, B. O.